பக்கங்கள் : பதினாறு+கல்விச்சுடர்-4

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 17 செவ்வாய்க்கிழமை (31.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :186

## நாளை மறுதினத்துடன் காலஅவகாசம் முடிவடைகிறது

# புத்தர்சிலை அகற்றப்படாவிட்டால் சத்திய வழியில் சாத்வீகப் போர்

## அரசுக்கு தமிழ் மக்கள் பேரவை எச்சரிக்கை

திருகோணமலை,மே31

திருகோணமலையில் சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலையை நாளைமறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் அகற்றாவிட்டால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் சத்திய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தப்படும்.

- இவ்வாறு திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று இப்பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான விரோதசக்திகளும் தீய சக்திகளும் இணைந்து நிறுவிய புத்தர் சிலையை அகற்றும்படி நீதிமன்றம் இரு தடவைகள் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜனாதிபதியின் வேண்டுகோளிற்கிணங்க எமது பண்பாட்டு விழுமியங்களின் அடிப்படையில் ஒருவாரகாலம் நாங்கள் பொறுமைகாத்து கால அவகாசம் வழங்கியுள்ளோம். இந்தக் கால அவகாசம் கொடுக்கப்பட்டது என்பது சரணாகதியல்ல. நாங்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கின்றோம் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள எஸ்.பி.திஸநாயக்க விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராகத் தன்னால் எதுவும் செய்யமுடியாது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, திருகோணமலை தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கையின் விடயத்திலும் அதே கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு நீதியின் பெயரால் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது எமது தாயகப் பிரதேசம் இராணுவ மயமாக்கப்பட்டு பலவித அச்சுறுத்தல்களும் அனாமதேய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. நாங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை புத்தர் சிலையை அகற்ற மாவட்ட நீதிமன்றில் இன்று வழக்கு

கொழும்பு,மே31

திருகோணமலை நகர பஸ்நிலையத்துக்கு அருகில் திடீரென முளைத்து இனப்பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றக்கோரும் சிவில் வழக்கு ஒன்று இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என அறியவந்துள்ளது. திருகோணமலை நகர சபை விசேட ஆணையாளரின் சார்பில் சட்டமா அதிபரின் பிரதிநிதி

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பில் புலிகளுடன் சமபங்கு கேட்கின்றனர் முஸ்லிம்கள்

## அவர்களது அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு,மே31

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கும் அதே பிரதிநிதித்துவத்தை - சம பங்கை - கோருகின்றார்கள் முஸ்லிம்கள்.**

**முஸ்லிம்களின் தரப்பில் நான்கு அமைச்சர்களும், ஒரு பிரதி அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்கள் என அறியவருகின்றது.**

மூன்று மட்டக் குழுக்களைக் கொண்ட பொதுக்கட்டமைப்பில் தேசிய குழுவில் (உயர் சபையில்) தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களுக்கு சம பங்கு அளிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

கீழ்நிலையில் - மூன்றாவது மட்டத்தில் - மாவட்டரீதியாக அமைக்கப்படும் குழுக்கள் அந்தந்த மாவட்ட இனவிகிதாசாரப்படி அமையும் என்றும் இணங்கப்பட்டுள்ளது.

இப்போது இடைநடுவில் இருக்கும - மாகாண மட்டத்தில் இயங்கப்போகும் - பிராந்தியக் குழுவிலேயே புலிகளுக்குக் கொடுக்க அரசு இணங்கியுள்ள அதே அளவான பிரதிநிதித்துவப் பங்கைத் தங்களுக்கும் வழங்குமாறு முஸ்லிம் தரப்புக் கோருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுனந்த தேசப்பிரிய விபத்தில் படுகாயம்!

கொழும்பு,மே31

குருநாகலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் சுதந்திர ஊடக இயக்கத்தின் இணைப்பாளர் சுனந்த தேசப்பிரிய படுகாயமடைந்துள்ளார்.

குருநாகல் - கொழும்பு வீதியில் இந்த விபத்துச்சம்பவம் இடம்பெற்றது. அந்த விபத்தினால் சுனந்த பயணம்செய்த கார் முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளது. காயமடைந்த சுனந்த தேசப்பிரிய குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். குருநாகல் பொலீஸார் இது சம்மந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவி சுழற்சி முறையில் கைமாறும்!

கொழும்பு,மே31

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவி இனிமேல் சுழற்சி முறையில் கைமாறும்.

சம்மந்தப்பட்டோர் இதற்கான முடிவை எடுத்திருக்கின்றனர் என அறியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவராக இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் இரா.சம்பந்தன் பணியாற்றி வருகின்றார்.

இந்தப்பதவியை ஆறு மாதங்களுக்கு ஒருவர் என்ற முறையில் தமிழ்க்கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு சுழற்சிமுறையில் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும் விரைவில் கூடும்போது இது குறித்து கலந்துபேசி

(16ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
**கல்விச்சுடர்**
5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இன்றைய உதயனில் வெளியாகின்றது.

## காங். சிமெந்து ஆலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே31

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவது குறித்து உயர்மட்டக்குழு ஒன்று நேரடியாக ஆராய்ந்துள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் கொக்கல வெல்லாவ பந்துல தலைமையில் காங்கேசன்துறைக்கு நேற்றுமுன்தினம் வந்த இக்குழு தொழிற்சாலையை மீள இயக்குவது குறித்து விரிவாக ஆராய்ந்தது. இக்குழுவில் மின்சாரத்துறை ஆலோசகர் எஸ்.சனத்முகரத்தினம், பொறியிலாளர் எஸ்.ஜோசப், கணக்காளர் ஏ.தவக்குமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் இயந்திரங்களையும் லங்கா சிமெந்து நிறுவனத்தின் இயந்திரங்களையும் இக்குழுவினர் பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

முதற்கட்டமாக வெளிநாட்டில் இருந்து சிமெந்தை இறக்குமதி செய்து காங்கேசன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரூ.2.5 லட்சம் பெறுமதியான கஞ்சா கொடிகாமத்தில் நேற்றுச் சிக்கியது

கொடிகாமம்,மே31

கொடிகாமம், பாலாவிப் பகுதியில் உள்ள வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 2லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சா நேற்றுப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

பாலாவி வடக்கில் கஞ்சாச்செடி பயிரிடப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்துக் கொடிகாமம் பொலீஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் ஜே.தேவர் தலைமையிலான பொலீஸ் குழுவினர் நேற்றுத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது அப்பகுதியில் உள்ள வீடொன்றில் அறுவடை செய்யப்பட்ட கஞ்சாச்செடிகள் மூடைகளாகக் கட்டப்பட்டுப் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததைப் பொலீஸார் கண்டுபிடித்தனர். தேடுதல் நடைபெற்றவேளை, வீட்டின் உரிமையாளர் அங்கு இருக்கவில்லை. அந்நிலையில் கஞ்சாவைக் கைப்பற்றிய பொலீஸார் வீட்டு உரிமையாளரின் மனைவியைத் தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாங்கேணி இராணுவ முகாம் முன் இன்று மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஏறாவூர்,மே31

கட்டடப்பொருள்கள் மற்றும் எரிபொருள்களை மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்துக்குக் கொண்டு செல்வதற்குப் படையினர் விதித்துள்ள கட்டுப்பாடுகளை நீக்குமாறு கோரி இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு மாங்கேணி இராணுவமுகாம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








தமிழீழ மாணவர் எழுச்சிதினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவ, மாணவியரை முதல் இரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட கல்விமேம்பாட்டுப் பேரவைத் தலைவர் செல்வி தி.பெரியதம்பி, யாழ். பல்கலை மாணவர் ஒன்றியச் செயலாளர் சிவகரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், யாழ். பல்கலை துணைவேந்தர் சு.மோகனதாஸ், யாழ். அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கண்ணன், கல்விக்கழக யாழ். பொறுப்பாளர் ஆர்வலன், தனியார் கல்வி நிறுவன ஒன்றியத் தலைவர் சரா. புவனேஸ்வரன் ஆகியோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்: கவிதரன், பிரபா).*

# மாணவ, மாணவியர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே31

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கும் கடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப்பெற்ற மாணவ, மாணவியருக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் சரா புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னதாக தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றினார். பொதுச் சுடரினை யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் சு.மோகனதாஸ் உட்பட்ட பிரமுகர்கள் ஏற்றினர்.

இந்த நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன், தமிழீழக் கல்விப் பேரவையின் தலைவர் செல்வி தி.பெரியதம்பி, யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

பின்னர் இடம்பெற்ற பரிசளிப்பில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் விருதுகள், வெற்றிக் கிண்ணங்கள் ஆகியவை வழங்கப்பட்டன. (ஒ-13-7-190)

## ஐ.பி.ஸி. ஒலிபரப்பு சேவை

யாழ்ப்பாணம்,மே31

ஐ.பி.ஸி. வானொலியின் தென்னாசிய நாடுகளுக்கான ஒலிபரப்புகள் தற்போது 41 மீற்றரில் 7315khz அலைவரிசையில் இடம்பெற்று வருகின்றன. தினமும் இலங்கை நேரப்படி காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும் மேற் படி அலை வரிசையில் இந்த ஒலிபரப்பு இடம்பெறுகின்றது. இதனைவிட 24 மணிநேரமும் www.ibctamil.co.uk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் இந்த ஒலிபரப்பைக் கேட்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# வீதி விபத்தில் 6 பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே31

கைதடிப் பகுதியில் நேற்று வானும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் வான் சாரதி உட்பட ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் கைதடிப் பாலத்துக்கருகில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் வான் சாரதியான யோ. மரியநாயகம் (வயது 30) என்பவரும் வானில் பயணித்தவர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த த.றமேஷ்கண்ணா (வயது 19), அளவெட்டியைச் சேர்ந்த யோ.அலெக்ஸ் (வயது 22), தாவடியைச் சேர்ந்த க.செல்வன் (வயது 25), சங்கானையைச் சேர்ந்த சி.பிரியதர்சினி (வயது 18), மல்லாகத்தைச் சேர்ந்த க.தர்சினி (வயது 18) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இசைக்குழுவினர் வன்னிப்பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இசைநிகழ்ச்சியொன்றை நடத்திவிட்டு நேற்றுக் காலை யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் சாவகச்சேரியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-13)

# விவசாயபீட மாணவரணிக்கு வட்டக்கச்சியில் கற்கைநெறி

## தற்காலிகமாக ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,மே31

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களில் ஒரு அணியினரின் கற்கைநெறிகள் வட்டக்கச்சியில் தற்காலிமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

விவசாயபீடத்தை மீண்டும் கிளிநொச்சியில் இயக்குவதற்கு வசதியாக அங்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படுகிறது. கட்டடப் பணி முடிந்ததும் விவசாயபீடம் கிளிநொச்சியில் இயங்கும். இதற்கு முன்னோடியாகவே விவசாய பீட மாணவர்களில் ஒரு அணியினரின் கற்கை நெறிகளை வட்டக்கச்சியில் ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. வட்டக்கச்சியில் உள்ள அரச பண்ணையொன்றில் தற்காலிக ஏற்பாடுகளுடன் மூன்று மாதங்களுக்குள் இந்தக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. எந்த அணியினரின் கற்கைநெறிகளை முதலில் அங்கு ஆரம்பிப்பதென இதுவரை முடிவுசெய்யப்படவில்லை.

இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நாளை முதலாம் திகதி கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-8)

## நிழற்குடை சேதம்

சாவகச்சேரி,மே31

சாவகச்சேரி கனகன்புளியடிச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பிரயாணிகள் பஸ்தரிப்பு நிலைய நிழற்குடை பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

கடந்தவருடம் படையினரால் இந்த நிழற்குடை அமைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது சேதமடைந்திருப்பதால், அந்தத் தரிப்பு நிலையத்தில் பிரயாணிகள் தங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-31)

## தொல்பொருள் காட்சிச்சாலை மீண்டும் மக்கள் பார்வைக்கு

நல்லூர்,மே31

யாழ்ப்பாணம் தொல்பொருள் காட்சிச்சாலையினை புதன்கிழமை தொடக்கம் மீண்டும் பொதுமக்கள் பார்வைக்கென திறந்துவிடப்படும் என காட்சிச்சாலையின் பொறுப்பாளர் எஸ்.சிவலிங்கம் தெரிவித்தார்.

காட்சிச்சாலை திருத்த வேலைகளுக்கென ஆறு மாதங்களாக மூடப்பட்டிருந்தது. 25லட்சம் ரூபா செலவில் காட்சியகத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் - அவர் கூறினார். (எ-111)

# ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்ய வெளிச்சவீட்டுப் பாடசாலை அமைப்பு

யாழ்ப்பாணம்,மே31

யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் ஆங்கில கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 'வெளிச்சவீட்டுப் பாடசாலை' என்ற பெயரில் வள நிலையம் ஒன்று யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு ஊடாக ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் இத்தகைய புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துகின்றது.

வலயங்களுக்கு ஒரு பாடசாலை எனத் தெரிவித்து நிதி உதவியை வழங்கி வளநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். வலயத்துக்கான வள நிலையம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வள நிலையம் மூலம் மாணவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அதற்கு முன்னோடியாக முதற்கட்டமாக யாழ். வலயத்துக்குட்பட்ட கோட்டங்களில் இருந்து ஐவர் வீதம் பெற்றோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சி நாளை புதன்கிழமை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. காலை 9.30 மணிமுதல் முற்பகல் 11.30 மணி வரை இப்பயிற்சி இடம்பெறும்.

வெளிச்சவீட்டு பாடசாலைத் திட்டம் குறித்துப் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வை பயிற்சி பெறும் பெற்றோர் மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-3)

# இடிமுழக்கம் ஏற்படும் சாத்தியம் ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே31

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாகக் காற்று திசை மாறுவதால் இடிமுழக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளதாக திருநெல்வேலியில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

எனவே, இடி, மின்னல் ஏற்படும்வேளைகளில பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென்றும் - அது அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரை அண்டிய பகுதிகளில் 4.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. வடமராட்சிப் பகுதியில் மழைவீழ்ச்சி, யாழ். நகரை அண்டிய பகுதிகளைவிடப் பல மடங்கு அதிகம் எனக் கூறப்படுகிறது.

அதேவேளை - நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.35 மணிமுதல் 3.45 மணிவரையான காலப் பகுதியில் கடுமையான இடி மின்னலும் பதிவாகியுள்ளது. மழை தொடர்வதற்கு வாய்ப்பில்லை. ஆயினும், காற்று திசை மாறும் இந்த வேளையில் இடி மின்னலின் தாக்கம் தொடரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இதேவேளை - வெப்பநிலை கடந்த சில தினங்களாக 33 பாகை செல்சியஸில் தொடர்ந்தவண்ணமுள்ளது என்று வானிலை ஆராய்ச்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (8)








கொடிகாமம் பாலாவிப் பகுதியில் நேற்று கைப்பற்றப்பட்ட கஞ்சாவை மேலுள்ள படத்திலும், அதனைக் கைப்பற்றிய பொலீஸாரைக் கீழுள்ள படத்திலும் காணலாம். *(படம்: கொடிகாமம் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## போர் விளிம்பை நோக்கிய நகர்வு

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டு தசாப்த கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகளாகின்றன.

இந்த உடன்படிக்கைக்கு அடிப்படையான புரிந்துணர்வு இப்போது கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய அமைதி முயற்சிகள் தேக்கமடைந்து விட்டதால் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கை குலைந்து, அவநம்பிக்கையும் சந்தேகமும் குரோதமும் உச்சத்துக்கு வளர்ந்துவிட்டன.

போர்நிறுத்தத்துக்கு வழிசெய்த யுத்தநிறுத்த உடன்படிக்கை, அதன் ஏற்பாடுகள் நிறைவு செய்யப் படாததால் கேள்விக்குள்ளாகி செயலிழக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, யாழ். குடாநாட்டில் மட்டும் இராணுவத்தினர் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் வளமான பூமியில் 144.15 சதுர கிலோமீற்றரைக் கபளீகரம் செய்து, ஆக்கிரமித்து வைத்துள்ளனர். 30 ஆயிரத்து 388 தமிழ்க் குடும்பங்கள் தங்கள் வீடுகளில் குடியேறமுடியாமல் இந்த உயர் பாதுகாப்பு வலய வியூகம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், இவற்றில் 24 ஆயிரத்து 178 குடும்பங்கள் இப்போதும் நலன்புரி நிலையங்களில் அவலத்தோடு தமது வாழ்வைக் கழித்துக்கொண்டிருக்கின்றன. 47 பள்ளிக்கூடங்களும், 246 கோயில்கள் மற்றும் தேவாலயங்களும் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியுள்ளன. 81.5 சதுர கிலோமீற்றர் கடற்கரையோரப் பிராந்தியமும் வளம் கொழிக்கும் 12 ஆயிரத்து 259 ஏக்கர் நெல் சாகுபடிக்கான காணிகளும், பயிர்ச்செய்கைக்கான தோட்டங்களும் இராணுவக் கட்டுப்பாட்டில் பயனற்றுக் கிடக்கின்றன.

யாழ். நகரின் மையத்தில் மட்டும் இரண்டு முக்கிய உல்லாச விடுதிகளில் இராணுவம் தங்கியுள்ளது. இது நகரில் இயல்புவாழ்க்கை மீளத் திரும்புவதற்குப் பெரும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளது.

இப்படி, தான் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களைத் திருப்பிக்கொடுப்பதற்கு அரச இராணுவம் மறுப்பது புரிந்துணர்வு உடன்படிக்கை ஷரத்துக்களை மீறுவது மட்டுமல்லாமல், வழமைநிலை திரும்புவதற்கு இடையூறு விளைவித்து, மோசமான விளைவுகளை உருவாக்கப் போகின்றது.

வவுனியா, மன்னார், மட்டக்களப்புப் போன்ற பிரதேசங்களிலும் இதைப் போன்ற ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன.

தமிழர் தாயகத்தில் தனது அதிகாரத்தை - ஆட்சியை - ஆளுகையை - இறைமையை, இரும்புக் கரம் கொண்டாவது நிலைநாட்டுவதில் தீவிரம் காட்டும் இலங்கை அரசு, அந்த மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஈட்டிக்கொடுப்பதில் புறக்கணிப்புச் செய்கிறது.

அமைதி வழியில் - சமாதான முறையில் - இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பற்றுறுதி, திடசங்கற்பம், நம்பிக்கை அரசுத்தரப்புக்கு இல்லாததே, இப்படி இயல்பு நிலையை ஏற்படுத்தாமல், இராணுவத் தீர்வின் பக்கம் அதனை நாடவைத்திருக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை - அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் அரசமைப்பு ஏற்பாடு ஒன்றை - வழங்குவதற்கு தைரியமும், மக்கள் ஆதரவும், செல்வாக்கும், உறுதியும் இல்லாத தலைமைகளிடம் தென்னிலங்கை அரச அதிகாரம் சிக்கியிருப்பதே இந்த அவல நிலைக்குக் காரணம்.

பேரினவாதப் புயலைக் கிளப்பி, அதில் குளிர்காயும் மூன்றாம் தர அரசியல்வாதிகளை ஒதுக்கித் தூக்கி எறிந்துவிட்டு, துணிவுடன் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்கும் மன உறுதிகொண்ட அரசியல் தலைமை தென்னிலங்கையில் இல்லாததால், அமைதித் தீர்வுக்கான வாய்ப்பு அடிபட்டுப்போய், நாடு யுத்தத்தை நோக்கி நகர்ந்து, போர் விளிம்பில் நிற்கும் அவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அமைதித் தீர்வில் அறவே நாட்டம் இழந்துள்ள அரசு, தனது ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி யுத்த முஸ்தீபுகளில் தீவிரமாக இறங்கியிருக்கின்றது. இஸ்ரேல் தயாரிப்புத் தாக்குதல் கலங்கள், ஆழ்கடல் செல்லும் அமெரிக்க - இந்தியப் போர்க்கப்பல்கள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெறப்பட்ட தூர வீச்சு எறிகணைகள் என்பன கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளன. இராணுவத் தேவைகளுக்காக மேலும் நூறு போர் டாங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. படைக்கு ஆட்சேர்ப்புத் தொடர்கிறது. இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் உதவியோடு விமானப்படை பலப்படுத்தப்படுவதாகவும் தகவல்.

இது தவிரவும், வடக்கு-கிழக்கில் இராணுவ அரண்கள், பதுங்குகுழிகள் புது உருப்பெறுகின்றன. இராணுவ ஆலோசகர்கள் அடிக்கடி இலங்கைக்கு வந்து முன்னைய யுத்தமுனைப் பகுதிகளுக்கு விஜயம் செய்கின்றனர்.

இவ்வாறு யுத்த முஸ்தீபு தீவிரமடைவது, நாடு போர் விளிம்பில் நிற்பதைத் தவிர வேறு எதைத்தான் எடுத்துக்காட்டுகின்றது?

# படிப்பும், பட்டமும் சமூக மேம்பாட்டுக்கு உதவாவிடில் அவற்றில் அர்த்தமேயில்லை

## தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் தெரிவிப்பு

கொழும்புத்துறை,மே31

தமிழ்மக்கள் சிறந்த புத்திஜீவிகள், பண்புள்ளவர்கள். அறிவியல் பட்டம் பெற்றவர்கள் என்ற கணிப்பீடு சர்வதேச மட்டத்தில் நிலவுகிறது. ஆனால், இந்தப் பட்டமும் அறிவும் எதற்குப் பயன்பட வேண்டும் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

குறிப்பாக எமது மண்ணில் பட்டினி நிலைமை உருவாகியுள்ளதுடன், திருட்டு, மதுபாவனை, துர்நடத்தை என்பனவும் அதிகரித்துள்ளன. எனவே இவற்றை இல்லாதொழிக்க முயல்வது படித்தவர்களின் - பட்டம் பெற்றவர்களின் வரலாற்றுக் கடமையாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் சஞ்சய்.

யாழ். பிரதேச அரசியல்துறை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய எழுச்சிப் பேரவையானது தேச விடுதலைக்கு உரம் சேர்ப்பதோடு மட்டுமல்லாது சமூக உயர்வுக்கும் பங்காற்ற வேண்டும். இவையிரண்டும் விடுதலையின் இரு கண்கள். எந்தெந்தப் பிரதேசத்தில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பதை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கத் தேசிய எழுச்சிப்பேரவை முன்வரவேண்டும்.

இன்று பல கிராமமக்கள் தங்களையும் உணராது பிறருக்கும் உதவாது சாக்கடை வாழ்வில் உழன்றுகொண்டிருக்கிறார்கள்.

சமூக விடுதலையின்றி நாம் பெறும் தேச விடுதலை நன்மை பயக்காது. எனவே, ஒவ்வொரு பிரஜையும் சமூக நலனுக்காக அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும்.

எமது தேசியத் தலைவரின் இத்தனை கால அயராத உழைப்பினால்தான் நாம் இன்று தலைநிமிர்ந்து பலத்துடன் நிற்கின்றோம். நாம் பலமிழந்த நிலையில் பேச்சுக்குச் செல்லவில்லை. எதிரி ஆக்கிரமித்த பெரும் பகுதிகளில் இருந்து அவர்களை விரட்டி அடித்த பின்னர் எமது பெரும் பலத்துடன்தான் நாம் பேச்சுக்குச் சென்றோம்.

இது தலைவரதும், போராளிகளதும், மக்களதும் போராட்ட உழைப்பால் நாம் பெற்ற வெற்றிகள். இதேவேகத்துடன் சமூக மேம்பாட்டிற்கான பணிகளை முடுக்கிவிடவேண்டும்.

அமைதி வழியில் மக்களுக்கான நல வாழ்வை அமைத்துக்கொடுக்க ஏதேனும் வழிகளுள்ளனவா என்பதை எமது தலைமை இந்த நெருக்கடியான சூழலிலும் சிந்தித்துக் கொண்டே இருக்கிறது.

ஸ்ரீலங்காவில் சட்டம், நீதி எந்தளவிற்கு காப்பற்றப்படுகிறது என்பதை சர்வதேசம் தற்போதைய நிலைமைகளின் மூலம் புரிந்து வருகிறது.

கலவரத்தைத் தூண்டி, இன மோதலை உருவாக்க ஆயுதப் படைகளும், இனவாதிகளும் இன்று முயன்று வருகின்றன.

தலைவர் இந்த சமாதான காலத்தில் தகுந்த முறையில் மக்களைத் தயார்படுத்தியதால் இவ்வாறான நிலைமைகளை அவர்கள் துணிவுடனும் எழுச்சியுடனும் எதிர்த்து வருகின்றனர்.

இந்த எழுச்சிபோன்று எமது மக்களின் அடிமட்ட வாழ்வியலை முன்னேற்ற அனைவரும் பாடுபடவேண்டும்.

தொலைக்காட்சிக்குள் மக்கள் இன்று தமது வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லநீரில்லை, விவசாய வளமில்லை என்கின்றோம். ஆனால், யாராவது பெய்யும் மழை நீரைத் தமது வளவுக்குள் தேக்கி வைக்க முயற்சி எடுத்துள்ளார்களா என்றால் அதுகேள்விக்குறியே.

சமூகவிடுதலை, தியாகம், பொதுப் பணி என்பன குறித்து ஒன்றுமே புரியாமல் கிணற்றுத்தவளைபோல் வசிப்பதால் யாருக்கு என்ன பயன் ஏற்படப் போகிறது.

இன்று பெண்களின் உடை அலங்காரம் சினிமாப்பாணியில் வெளிப்படுகிறது. அடாவடி, கோஷ்டிமோதல்கள் அதிகரித்துள்ளன. எமது தமிழ்ப்பண்பாடு எங்கே போய்விட்டது.

மாற்றங்களை உருவாக்கவேண்டும். அறியாமையில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். பட்டம் பெற்றோரும் புத்திஜீவிகளும் தமது ஆற்றல்கள் - வளங்களை சமூக மேம்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ஏ-30)

# தற்போதைய காலநிலை மாற்றத்தினால் வெங்காயச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம்

## எச்சரிக்கின்றார் விவசாய உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம்,மே31

குடாநாட்டில் தற்போது நிலவும் மப்பும் மந்தாரமும் மற்றும் மழைத்தூறல் போன்ற காலநிலையால் வெங்காயச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம் என யாழ்.விவசாயத் திணைக்கள விவசாய உத்தியோகத்தர் கி.சிறீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொடரும் காலநிலை மாற்றம் காரணமாக வெங்காயப்பயிரில் இலை முறுகல் நோய்(Leaf Twisting) மற்றும் குமிழ் அழுகல்நோய் ஆகியன ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

எனவே, இத்தகைய நோய்களில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

எனவே, வெங்காயச் செய்கை மேற்கொள்பவர்கள் நடுகைக்கு முன்னர், ஏற்கனவே, பயிர்செய்யப்பட்ட நிலங்களில் இத்தகைய தொற்று ஏற்பட்டதா என்பதை ஆராய்ந்து விதை வெங்காயத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

விதை வெங்காயத்தில் இத்தகைய தொற்றுக் காணப்படின் அத்தகைய தொற்றை நீக்கவேண்டும். அதன் பின்னரே நடுகை ஆரம்பிக்கப்படவேண்டும்.

தொற்று நீக்கல் என்னும் போது 50 லீற்றர் நீரில் 100 கிராம் ஹோமை என்ற பூஞ்சண நாசினியைக் கரைந்து அதில் 50கிலோ வெங்காயத்தை 15 தொடக்கம் 30 நிமிடங்கள் வரை ஊறவிட்டபின்னர், நிழலில் உலர்த்தி, நடுதல் ஆகும். ஏற்கனவே, வெங்காயத்தை நடுகை செய்தவர்கள், வெங்காயப் பயிரில் இலை முறுகல், குமிழ் அழுகல் அறிகுறி தென்படுகின்றதா என்பதைத் தினமும் கண்காணிக்கவேண்டும்.

நோய் தொற்றிய பயிரை அகற்றி அழித்த பின்னர், 'ரொப்சின்' அல்லது 'டக்கோனில்' என்னும் நாசினிகளில் ஏதாவது ஒன்றை சிபார்சுக்கேற்ப விசிற வேண்டும்.

சாதகமான காலநிலை நிலவுமானால், விசிறி 10 ஆம் நாளில் 'ரொப்சின்' அல்லது 'டக்கோனில்' என்னும் நாசினிகளில் ஒன்றை மாற்றி விசிறவும்.

வெங்காயத்தை அறுவடை செய்து சேமித்து வைப்பதனால் அறுவடைக்கு 2 வாரங்களுக்கு முன்னரே 'காபென்டைசிம்' (பலஸ்ரின்) என்ற பூஞ்சண நாசினியை விசிறவேண்டும்.

எக்காரணம் கொண்டும் ஒவ்வொரு பூச்சி நாசினியுடனும் எவ்வித நாசினியையும் கலந்து விசிறக்கூடாது. இது விடயமாக, மேலதிக விவரம் தேவைப்படுவோர் தத்தமது பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளமுடியும் - என்று அவர் மேலும் கூறினார். (ஏ-12)

## உலக உணவுத் திட்டத்தின்

# இலவச உணவு வழங்கல் அரைவாசியாகக் குறைப்பு

கொழும்பு,மே 31

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தனது உணவு வழங்கும் திட்டத்தில் ஜீன் 30ஆம் திகதியிலிருந்து 50 வீதம் குறைப்புச் செய்யப்போவதாக உலக உணவுத் திட்ட அமைப்பு அறிவித்துள்ளது.

தற்பொழுது உலக உணவுத் திட்டம், ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குட்பட்ட 9 லட்சத்து 10 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கி வருகின்றது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாறை, அம்பாந்தோட்டை, காலி, திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கென 400 தொன் உணவினை இந்த அமைப்பு அன்றாடம் வழங்கி வருவதாகத் தெரிகின்றது.

ஆழிப்பேரலை பாதிப்பு ஏற்பட்டு இரு தினங்களின் பின் உலக உணவுத்திட்டம் தனது உணவு வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்தது. இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 50 ஆயிரம் தொன் உணவினை இவ்வமைப்பு அனுப்பிவைத்துள்ளது. ஏறத்தாழ 10ஆயிரம் தொன் உணவு மாதந்தோறும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஜீன் 30ஆம் திகதியிலிருந்து 'தொழிலுக்கு உணவு' திட்டத்தை இவ்வமைப்பு ஆரம்பித்திருப்பதாகவும் -

பாதிக்கப்பட்டவர்கள் இதன் மூலம் தங்கள் இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க உதவமுடியும் என்றும் - இவ்வமைப்பின் பேச்சாளர் செல்வி சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிப் பெண்கள் போன்ற தவிர்க்க முடியாத நிலையிலுள்ளவர்களைத் தவிர ஏனையவர்களுக்கு உணவு வழங்குவது நிறுத்தப்படும் என்றும் -

தொழில் செய்யக்கூடியவர்கள் உணவைப் பெற்றுக்கொள்வதற்காகத் தொழில் செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ப)

**நாளை**

வைகாசி 18
புதன்கிழமை
01.06.2005
திதி : நவமி
காலை 06.35 வரை
தசமி
பின்னிரவு 04.58 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பின்னிரவு 03.23 வரை
சுபநேரம் : 04.22 - 05.52
ராகுகாலம் : 11.52 - 01.22
(யாவும் பழைய நேரப்படி)

## யாழ். தேர்தல் தொகுதியில்

# மேலும் 50 ஆயிரம் பேர் வாக்குரிமைக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,மே31

யாழ். தேர்தல் தொகுதியில் இவ்வருடம் மேலும் 50 ஆயிரம் பேர் வாக்குரிமைக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 18 வயதை அடைந்தபின் கடந்த வருடம் பதிவுகளை மேற்கொண்டவர்களின் விவரங்கள் யாழ். தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

**உதவாக்கு**

இறக்கும் பொழுதைவிட பிறக்கும் பொழுது எல்லோரும் செல்வந்தர்களாகவே இருக்கின்றனர்.

– சாக்ரடீஸ்

புதிய தேருநர்களின் விபரங்களை நாளைமுதல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சிச் சபைகள், அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றில் வைக்கப்படும் தேர்தல் டாப்புகளில் அறியமுடியும்.

2003ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் வாக்காளர் எண்ணிக்கை 6 லட்சத்து 51 ஆயிரத்து 361 ஆகும். கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின்படி, தயாரிக்கப்பட்ட வாக்காளர் டாப்பின்படி, வாக்காளர் எண்ணிக்கை 7 லட்சத்து 2 ஆயிரத்து 173 ஆகும். புதிய வாக்காளர் எண்ணிக்கை 50 ஆயிரத்து 812 ஆக உயர்ந்துள்ளது.

(3-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

JE தொடர் இலக்கமுடைய Pulsar DTS 180 கருஞ்சிவப்பு நிறமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777570288. (45976)

### காணி விற்பனைக்கு

உரும்பிராய், பெற்றோல் நிலைய அருகில் சாயி மில் முன் ஒழுங்கையில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.இரத்தினசிங்கம் (துரை), உதயசூரியன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (45939)

### கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள், 01.06.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி., றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட்., மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்., தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை., ராதா, மாவடி, வட்டுக்கோட்டை., P.ரவி, சாவகச்சேரி, கௌரி ஸ்ரோர், பண்டத்தரிப்பு. T.P.: 222 2867.

(45994)

### ஹோட்டலுக்கு ஆள்கள் தேவை

எமது திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு -

- ▲ சைனீஸ் உணவு தயாரிப்பாளர்
- ▲ சப்ளையர்கள்
- ▲ றொட்டி மேக்கர்
- ▲ சமையல்காரர்

ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.

**திறீ ஸ்ரார் ஹோட்டல்,**
**162, ஆஸ்பத்திரி வீதி,**
(சி-43115) **யாழ்ப்பாணம்.**

### உடனே தேவை

யாழ்ப்பாணத்தின் பழைமையான பிரபல அச்சகத்திற்கு பின்வருவோர் உடனே தேவை.
01. ஒப்செற் (Offset) மெசின் மைண்டர்
02. கணனி பக்கவடிவமைப்பாளர்
உங்களது சுயவிவரத்தோடும் ஆவணங்களோடும் எதிர்வரும் 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில்வரவும்.

**சைவபரிபாலன சபை,**
**இல. 66, கல்லூரிவீதி,**
**நீராவியடி,**
(36002) **யாழ்ப்பாணம்.**


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்தப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரிசளிப்பு விழாவில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா முதன்மை விருந்தினராகவும் யாழ்கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். திருமதி கமலா குணராசா பரிசில்களை வழங்குவார். (எ)

### பாலம் புனரமைப்பு

இருபாலை - கோண்டாவில் வீதியில அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள பாலம் கடந்தவாரம் நல்லூர் பிரதேச சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பாலம் புனரமைக்கப்பட்டதையடுத்து மழைநீர் வழிந்தோடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (எ-12)


**A/L 2007**
**பொருளியல**
K.உதயன்
ஆரம்பம்:
01-06-2005
அனுமதிகள் முன்கூட்டியே பெறப்படல் வேண்டும்
**புதிய யூனிவேசல் அக்கடமி**
(45761)


# எஸ்.பி.திஸநாயக்க 7 ஆம் திகதியுடன் எம்.பி. பதவியை இழக்கிறார்

கொழும்பு,மே31

தற்போது சிறைத்தண்டனை அனுபவித்துவரும் நுவரெலிய மாவட்டத்தின் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸநாயக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அடுத்தமாதம் 07ஆம் திகதியோடு செல்லுபடியற்றதாகின்றது.

அரசமைப்பின் 66 (ஈ) விதிகளுக்கு அமைய நாடாளுமன்றத்தின் முன் அனுமதி பெறாது எஸ்.பி.திஸநாயக்க தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் வரையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு சமுகமளித்திருக்கவில்லை. அத்தோடு, கடந்த மூன்று மாதகாலத்துக்குள் அவர் விடுமுறையொன்றைக் கோரி நாடாளுமன்றத்தில் விண்ணப்பம் எதனையும் சமர்ப்பிக்கவில்லை. எதிர்வரும் 7ஆம் திகதியுடன் அவர் 6 மாத காலம் நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால், அவர் தனது எம்.பி. பதவியை இழக்கிறார்.

மேலும் வெற்றிடமாக உள்ள எஸ்.பி.திஸநாயக்காவின் உறுப்பினர் பதவிக்கு திருமதி ரேணுகா ஹேரத்தை நியமனம் செய்ய ஐ.தே.கட்சி தயாராகி வருவதாகவும், மேற்படி வெற்றிடத்தை நிரப்புமாறு நாடாளுமன்றப் பொதுச்செயலாளர் பிரியாணி விஜேசேகரவிடமிருந்து அறிவித்தல் கிடைதத பின்னரே ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் மூலம் அது பற்றி தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவிக்கப்படுமெனவும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(8-206)


### ஹோட்டலுக்கு மனேஜர் தேவை

எமது ஹோட்டலுக்கு அனுபவமுள்ள மூன்று பாஷைகளிலும் பரிச்சயமுள்ள மனேஜர் ஒருவர் தேவை.

தகுதியுடையோர் நாளை (01-06-2005) புதன்கிழமை காலை 10-12 மணிக்குள் நேரில்வரவும.

**ஹோட்டல் கிறீன் இன்**
இல.60, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(46000) T.P. 222 3898 (21-11-34-26)

### எங்கள் சேவை உங்களுக்கு ஏன் தேவை?

எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள் பலருக்குப் பல்வேறு வகையான வேலைகளைப் பெற்றுக்கொடுத்துச் சாதனை படைத்துள்ளது.

**உங்களுக்கு வேலையாள்கள் தேவையா? வேலை தேவையா? எங்கள் சேவை உங்களுக்கு ஏன் தேவை?**

எமது பிரதேசத்தில் பல்வேறுபட்ட வேலைகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யப் பொருத்தமான வேலையாள்களும் உள்ளனர். ஆனால், அவர்களுக்கிடையே பொருத்தமான தொடர்பு மட்டும் இல்லை.

**அப்பணியை நாங்கள் செய்கின்றோம்.**

*எனவே -*

**நிறுவன/வேலைத்தள உரிமையாளர்களே!**

உங்கள் நிறுவன/வேலைத்தளங்களில் நிலவும் எந்த வெற்றிடங்களுக்கும் எம்மை அணுகுங்கள்.
பொருத்தமானவர்களைப் பெற்றுத்தர நிச்சயம் முயலுவோம்.

**வேலையை எதிர்பார்த்திருப்போரே!!**

நீங்கள் எதிர்பார்க்கும் வேலை எதுவாகினும் உங்களுக்குத் தகைமை இருப்பின் நாம் அதைப் பெற்றுத்தர முயலுவோம்.
தொலைபேசி இலக்கத்தைக் குறித்து வையுங்கள்.
தேவைப்படும் போது அழையுங்கள்.

*குறிப்பு:* பின்வரும் வேலையாள்கள் உடனடியாகத் தேவை.
I) விற்பனையாளர் (ஆண், பெண்) II) பணிப்பெண்கள்
III) மருந்து விற்பனையாளர் IV) பொதி செய்வோர் (பெண்- மானிப்பாய்)

**FIRST MAN POWER CENTER & JOB AGENT**
T.P.: 021 - 2223298, 0773 - 068984.
முகவரி: ***POWER GYM BUILDING,***
230/1, நாவலர் வீதி
(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம். (சி-43116) (26-11-34)

### நினைவுப் பிரார்த்தனை

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் துணை
சைவபூஷணம் கா.நல்லையா (மலேயன் பென்சனர்)
குடும்ப உறுப்பினர்கள்

31 ஆம் நாள் நினைவு



சிவபூமி 03 07 1923 — இறைபூமி 30 04 2005
திருமதி
**கனகாம்பிகை நல்லையா**

11 ஆவது ஆண்டு நினைவு



தவப்பேறு 11 01 1960 — சிவப்பேறு 03 06 1994
திருமதி
**ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
(ஆசிரியர், B.A.(Hons), Eng.Trd.)

திதி: 31-05-2005

இமைப்பொழுதும் எம்நெஞ்சில் நீங்கா இனியவரே
இனி உங்களை எங்கே காண்போம்...?

நினைவுப் பிரார்த்தனை வைபவம்
இன்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
28, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூர்.
மகள், மருமக்கள் குடும்பத்தினர்.
(45979)(50-11-34)


பொதுக்கட்டமைப்பு நடைமுறைக்கு வந்தால்

# ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்துப் போட்டியிடுவதற்கு முடிவு

கொழும்பு,மே31

உத்தேச பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் விதமாக ஜனாதிபதி செயற்படுவாராயின் எதிர்கொள்ளவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஜே.வி.பி. கட்சியின் அரசியல் குழு ஏற்கனவே, முடிவு செய்துள்ளதாகவும், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அரசைவிட்டு விலகிவிடவும் அது தீர்மானித்துள்ளதாகவும் சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் பொறுப்பு ஜே.வி.பி. கட்சியின் மத்திய செயற்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதோடு, அதுதொடர்பான அவசரக் கூட்டமொன்றும் சில தினங்களில் இடம்பெறவுள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. உறுப்பினரொருவரை நிறுத்துவது தொடர்பான ஆயத்தங்கள் இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக யார் நிறுத்தப்படவுள்ளார் என்பது இதுவரையிலும் தீர்மானிக்கப்படவில்லை எனவும், ஐ.தே.கட்சியின் சார்பாக அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, அத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அவரை எதிர்த்துப் போட்டியிடவுள்ள வேட்பாளரைத் தெரிவுசெய்யும் விடயத்தில் ஜே.வி.பியின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டியது மிக அவசியம் என்பது சுதந்திரக்கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(8-206)


### JOB ADVERTISEMENT

**SURVIVOR ASSISTANCE COORDINATOR (MINE ACTION)**

In the framework of its partnership with **Unicef, White Pigeon Technical Institute of Prosthesis-Jaffna,** seeks a dynamic Survivor Assistance coordinator to be posted at the **District Mine Action Office,**

Jaffna on full time basis.

MAIN RESPONSIBILITIES:

★ Together with all stakeholders prepare a district strategy for survivor assistance to be adopted by relevant forum.

★ Establish strategic alliance with other agencies providing services to survivors or other people with disabilities to facilitate implementation of the identified interventions.

★ Ensure that survivors are aware of services, which are available.

★ Provide training and monitor to UNICEF partners on survivors' assistance, including the planning, implementation of survivors assistance related projects, to ensure that activities are in line with UNICEF strategies.

QUALIFICATIONS:

- Minimum G.C.E (A/L) pass.
- Preference will be given to Bachelor degree in Social Science.
- Relevant working experiences in related field
- Computer skills.
- Excellent knowledge of English both oral and written

If you meet the required qualification and are interested in this post, Please send your detailed Curriculum Vitae to

UNICEF
**White Pigeon Technical Institute of Prosthesis,**
**63, Palaly Road, Thirunelvely, Jaffna.**
**Before 4th of June2005.**

### கண்ணீர் அஞ்சலி

எமது பணிப்பாளர் சபையில் பணிப்பாளராக இருக்கும்
திரு.சபாரத்தினம் தெட்சணாமூர்த்தி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பூபதி சபாரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**பணிப்பாளர் சபை,**
**உறுப்பினர்கள்,**
**பணியாளர்கள்,**
**இல்லச் சிறார்கள்.**

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி-43117)(26-11-34)

### மரண அறிவித்தல்

**தோமஸ் ஜோண்**



இல.49, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் O.L.R.CHURCH LANE, உயரப்புலம் ஆனைக்கோட்டையைத் தற்காலிக வசிபிடமாகக் கொண்ட தோமஸ் ஜோண் அவர்கள் 29-05-2005 ஞாயிற்றுக்கிழமை மறுமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சாறம்மா அவர்களின் அன்புக் கணவரும் தோமஸ், ஜேச்சல், ஜெசி, பெஞ்சமின் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் ஜேன், டானியல், குணாளன் ஆகியோரின் அனபு மாமனாரும் எஸ்ரோன், கேர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31-05-2005) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இல.9, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மெதடிஸ்த திருச்சபை, ரிம்மர் மண்டபத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

O.L.R. CHURCH LANE,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (45997)(26-11-34)

தகவல்:
திருமதி றேச்சல் டானியல்
*(மகள்).*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனால் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்
# 8 விக்கெட்டுக்களால் வென்று யாழ்.பல்கலை அணி சம்பியன்

## கௌரிபாகன் சதம் அடித்தார்

யாழ்ப்பாணம்,மே31

டொனால் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்திற்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைடஸ் விளையாட்டுக் கழக அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கார்த்தீபன் 50 ஓட்டங்களையும் சுதர்சன் 50 ஓட்டங்களையும் பிருந்தாவன் 25 ஓட்டங்களையும சம்ராஜ் 15 ஓட்டங்களையும் காண்டீபன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நிஷாந்தன் 6.4 ஓவர் பந்துவசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டினையும், அருள்ராஜ் 9 ஓவர் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டினையும், ஜெயந்தன் 6 ஓவர் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் யாதந்தனன் 9 ஓவர் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 33 ஓவர்களில் 3 விக்கெட்டினை இழந்து 182 ஓட்டங்களை பெற்றது.

கௌரிபாகன் ஆட்டம் இழக்காமல் 106 ஓட்டங்களையும் சர்வானந்தன் 37 ஓட்டங்களையும், மணிவண்ணன் 10 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிரசாந் 7 ஓவர் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் சம்ராஜ் 4 ஓவர் பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் பிரகாஸ் 8 ஓவர் பந்துவீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். யாழ்.பல்கலைக் கழக அணி 8 விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக யாழ்.பல்கலைக் கழக அணி வீரர் ரி.கௌரிபாகனும் - சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.பல்கலைக் கழக அணி வீரர் நிஷாந்தனும் - சிறந்த களத தடுப்பாளராக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் சுதர்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த ஆட்ட நாயகனாக யாழ்.பல்கலைக் கழக அணி வீரர் ரி.கௌரிபாகன் தெரிவானார்.

சகலதுறை ஆட்ட நாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணி வீரர் சர்வானந்தன் தெரிவு செய்யப்பட்டார். (3-190)

# பெரியபுலம் - விக்டோரியா மோதல் வெற்றி தோல்வியின்றி முடிந்தது

யாழ்ப்பாணம்,மே31

சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணிக்கும் பெரியபுலம் வித்தியாலய அணிக்கும் இடையில் நடந்த சிநேகபூர்வ ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

விக்டோரியா மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இன்பராஜ் 18 ஓட்டங்களையும் முகிலன் 28 ஓட்டங்களையும கஜீந்தன் 25 ஓட்டங்களையும் பிரதீபன், நிசாதன் தலா 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சு சார்பில் விக்டோரியா அணியில் ஜெயந்தன 4 விக்கெட்டுக்களையும் கோவர்த்தனன் 3 விககெட்டுக்களையும் தவக்குமரன் 2 விக்கெட்டுக்களையும் சஞ்சீவன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்டோரியா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் கரன் 17 ஓட்டங்களையும் சஞ்சீவன் 30 ஓட்டங்களையும் சயந்தன் 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சு சார்பில் பிரதீசன் 7 விக்கெட்டுக்களையும் இன்பராஜ், கயிந்தன், வினோஜன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்தி வக்டோரியா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது.

பந்துவீச்சு சார்பில் தவக்குமரன், சஞ்சீவன், கோவர்த்தனன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

விக்டோரியா அணி 2ஆம் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி 66 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. இதில் கரன் 17 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சு சார்பில் பிரதீசன் 4 விக்கெட்டுக்களையும் வினோஜன், கஜிந்தன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியில் விக்டோரியா 4 புள்ளிகளையும் பெரியபுலம் 14 புள்ளிகளையும் பெற்றன. (3)

## முல்லை மாவட்ட பெருவிளையாட்டு நிகழ்வு

முல்லைத்தீவு,மே31

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுக்களில் கரபந்தாட்டம், எல்லே, துடுப்பாட்டம் ஆகியன எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயத்தில் இடம்பெறும் 19 வயதுப் பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் மல்லாவி மத்திய கல்லூரி.

★ புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம் எதிர் மாங்குளம் மகா வித்தியாலயம்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

விளையாட்டு

★ முல்லைத்தீவு மகாவித்தியாலயம் எதிர் மல்லாவி மத்திய கல்லூரி.

★ விசுவமடு மகா வித்தியாயலம் எதிர் யோகபுரம் மகாவித்தியாலயம்.

ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அணிகள்.

**15 வயதுப் பிரிவு**

★ ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் எதிர் மல்லாவி மத்திய கல்லூரி.

★ கலைமகள் வித்தியாலயம் எதிர் நட்டான்கண்டல் அ.த.க.பாடசாலை.

**17 வயதுப் பிரிவு**

★ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் பாண்டியன் குளம் மகா வித்தியாலயம்.

★ கலைமகள் வித்தியாலயம் எதிர் நட்டான்கண்டல் அ.த.க.பாடசாலை.

**19 வயதுப் பிரிவு**

★ செம்மலை மகாவித்தியாலயம் எதிர் முத்தையன் வலது கரை அ.த.க.பாடசாலை.

★ முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி எதிர் மல்லாவி மத்திய கல்லூரி. (3-410)

# செவிப்புலன் வலுவற்றோர் விளையாட்டுப் போட்டிகள்

வலி.வடக்கு,மே31

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத் தலைவர் க.பிரகாஷ் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:

**சைக்கிள் ஓட்டம்** - கமலதீபன், நடனசபேசன், இராசரெத்தினம்.

**மரதன் ஓட்டம்** - சாரங்கன், ரவீந்திரன், கமலதீபன்.

**100 மீற்றர்** - 18-25 வயதுக்குட்பட்ட பெண்கள் - கிரிஜா, தனுமதி, ஜமுனா.

**26-35 வயதுக்குட்பட்ட பெண்கள்** - அன்ரனியம்மா, நளினி, செபமாலை.

**18-29 வயதுக்குட்பட்ட ஆண்கள்** - சதீஸ்கரன், திருக்கோணேஸ்வரன், சாரங்கன்.

**30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்** - சோமவாசன், சுரேஷ்கரன், அன்பஸ்.

**40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்** - செந்தில்குமார், முருகவேல், சுகிந்தன்.

**சங்கீதக் கதிரை - 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள்** - சித்திரா, ஜெயமாலினி, அன்ரனியம்மா.

**பணிஸ்சாப்பிடல் - 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்** - கெங்காதரம்பிள்ளை, மகாதேவா, துரைரத்தினம்.

**பலூன் உடைத்தல் - 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள்** - திருமதி கெங்காதரம்பிள்ளை, கலாதேவி, கலாநிதி.

**40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்** - கணேசலிங்கம், மகாதேவா, தம்பிஐயா.

**நீளம்பாய்தல்- 30 வயதிற்குட்பட்ட ஆண்கள்** - சிறிக்குமார், சந்திரன், சமந்தா.

**30 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்** -தியாகேஸ்வரன், சாந்தகுமார், தனவேந்தன்.

**200 மீற்றர் - 30 வயதிற்குட்பட்ட ஆண்கள்** -தனவேந்தன், திருக்கோணேஸ்வரன், தியாகேஸ்.

**30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்** - செந்தில்குமார், ஸ்ரீகுமார், முருகவேல்.

**குண்டெறிதல் - ஆண்கள்** - துரைரத்தினம், பிறேமகாந்தன், சண்முகநாதன்.

**தட்டெறிதல் - பெண்கள்** - அன்ரனியம்மா, ஜெயசோபனா, நளினி.

**உயரம் பாய்தல் - 30 வயதிற்குட்பட்ட ஆண்கள்** - சாந்தகுமார், சாரங்கன், தனவேந்தன்.

**30 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்** - சிறிக்குமார், இராசரட்ணம், சமந்தா. (3-86-203)



முழங்காவில் மாவீரர் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழாவில் சிறுவர்கள் போட்டி ஆரம்பத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்கும் காட்சி.
(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# முல்லை வலய தடகளப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு,மே31

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களிற்கிடையே இடம்பெற்ற தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

15 வயது, 17 வயதுப் பிரிவுகளின் முடிவுகள் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு
### ஆண்கள்

**100 மீற்றர்** - ஈ.வசந்தன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), கே.அன்ரனி ஜெயநாதன் (உடையார் கட்டு மகாவித்தி.), என்.அனோஜன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**200 மீற்றர்** - கே.அன்ரனி ஜெயநாதன் (உடையார் கட்டு மகாவித்தி.), எஸ்.சதீஸ்குமார் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), வை.கலையோகன் (செம்மலை மகாவித்தி.).

**400 மீற்றர்** - எஸ்.சதீஸ்குமார் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), எஸ்.ஜெயசந்திரன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ரி.கோணேஸ்வரன் (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.)

**100 மீற்றர் தடைதாண்டல்** - கே.ஜெனித்திரகன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எஸ்.விஜிதர் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)

**நீளம் பாய்தல்** - எஸ்.பிரியங்கன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எஸ்.ஜெயசந்திரன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), கே.அன்ரனி ஜெயநாதன் (உடையார் கட்டு மகா வித்தி.),

**உயரம் பாய்தல்** - எஸ்.பிரியாங்கன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஈ.சஞ்சயன் (வித்தியானந்தாக் கல்லூரி), என்.அனோஜன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**குண்டு போடுதல்** - கே.பிரசாந்த் (வற்றாப்பளை மகாவித்தி.), ஈ.வசந்தன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), எஸ்.வினோஜ் (கலை மகள் வித்தி.).

**தட்டெறிதல்** - ஈ.வசந்தன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), கே.பிரசாந்த் (வற்றாப்பளை மகாவித்தி.), எஸ்.மகேந்திரன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**ஈட்டி எறிதல்** - எஸ்.ரகுபரன் ([illegible]வரா வித்தி.), என்.அனோஜன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), எஸ்.சுஜிபவன் (கலைமகள் வித்தி.).

**4X100 அஞ்சல்** - கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, உடையார்கட்டு மகாவித்தியாலயம்).

### பெண்கள்

**100 மீற்றர்** - ரி.கலையரசி (உடையார்கட்டு மகாவித்தி.), எம்.கபோஜினி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கே.ஆர்.நளாயினி (குமுழமுனை மகாவித்தி.).

**200 மீற்றர்** - ஈமீதா (உடையார்கடடு மகா விததி.), எஸ்.கண்ணகை கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), எம்.பிந்துசா (வித்தியானந்தாக் கல்லூரி).

**100 தடை தாண்டல்** - ரி.கலையரசி (உடையார்கட்டு மகாவித்தி.), எஸ்.கண்ணகை (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), எஸ்.சலஸ்ரீனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**நீளம்பாய்தல்** - பி.நிதியா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), எஸ்.கௌசி (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), வை.சிந்துஜா (உடையார் கட்டு மகாவித்தி.).

**உயரம் பாய்தல்** - ஆர்.நளாயினி (குமுழமுனை மகாவித்தி.), பி.நிதியா (கொக்குளாய் அ.த.க.பாடசாலை), எஸ்.சலஸ்ரீனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**குண்டுபோடுதல்** - ஜே.சோபிதா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), பி.நிதியா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), கே.பிரசாந்தினி (வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம்).

**தட்டெறிதல்** - ஜே.சோபிதா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), பி.ரேகா (விக்னேஸ்வரா வித்தி.), எஸ்.சஜிதா (வித்தியானந்தாக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்** - வை.ஜெயதீபா (செம்மலை மகாவித்தி.), ரி.சஜிவனி (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி), ஜே.சோபிதா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**4X100 அஞ்சல்** - உடையார்கட்டு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கொக்கிளாய் அ.த.க.பாடசாலை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீர்கொழும்புக்கு அருகே கோர விபத்தில் ஐவர் பலி!

கொழும்பு,மே31

நீர்கொழும்பு - புத்தளம் பிரதான வீதியில் கட்டுவ என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றொருவர் பின்னர் மரணமானார். ஆறு பேர் படுகாயமுற்றனர். அவர்களில் வான் சாரதி உட்பட இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கோரவிபத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 3.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், ராஜங்கனை என்ற இடத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த வானொன்றும், கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிச்சென்றுகொண்டிருந்த கெண்டயினர் தாங்கிய பெரிய வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாலேயே வானில் பயணம் செய்த நான்கு பேர் அந்த இடத்திலேயே கொலலப்பட்டனர்.

கொழும்பில் மரணச்சடங்கொன்றில கலந்து கொள்வதற்காக அநுராதபுரம், ராஜங்கனைப் பகுதியிலிருந்து வானொன்றில் பயணித்தவர்களே இந்தக் கோர விபத்தில் சிக்குண்டனர் என நீர்கொழும்பு பொலீஸார் தெரிவித்தனர்.

வான் அதிவேகமாகப் பயணித்ததால் சாரதி அதன் கட்டுப்பாட்டை இழந்தார் என்று கூறப்பட்டது.

காயமுற்றவர்களில நான்குபேர் நீர்கொழுமபு வைததியசாலையிலும் மூவர் கொழும்பு வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். வான் சாரதியும், மற்றொருவரின் நிலையும் கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-8)


## J CITY TELE COM.

**தொலைத்தொடர்பு சேவையில் ஒரு புதிய பரிணாமம்**

*வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் -*

- அமைதியான சூழலில்
- மிகக் குறைந்த கட்டணத்தில்
- மிகத் துல்லியமாக
- உடனுக்குடன் - உரையாடி மகிழ இன்றே நாடுங்கள் -

J CITY TELE COM.

59/2. பெரியகடை, யாழ்ப்பாணம் (சிவராதா ரெக்ஸ் அருகில்). T.P.: 021 - 222 8072. E-mail jcitytelecom@yahoocom.

(45978)(26-11-34)


## ஈராண்டில் ஈரவிழிகளுடன்

மலர்வு 02 - 04 - 1966



உதிர்வு 24 - 05 - 2003

கலாவித்தகர்

### திருமதி மேகலா வசந்தகுமார்

B.A.(HONS) Dip.in.Edu.

(ஆசிரியர், யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

**திதி: நவமி (31.05.2005)**

ஆண்டுகள் இரண்டிலும்
ஆறவில்லை எம்மனது.

பிஞ்சுகள் இரண்டுடன் நானும்
கெஞ்சும் குரல் கேட்கலையோ.

*உங்கள் பிரிவால் துயருறும்:*

**ஆசை மக்கள்,**
**அன்புக் கணவர்,**
**பாசமிகு குடும்பத்தினர்.**

*இல. 61/1. பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (45993)(42-11-34-26)

## வடக்கு - கிழக்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் (பிறைவேற்) லிமிட்டட்

**NORTH EAST DEVELOPMENT CONSULTANTS (PVT) LTD.**

### பதவிகள் வெற்றிடம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைபெறுகின்ற குடிசார் நிர்மாணத்திட்டங்கள் யாவும் ஒரு சீரான தரத்தில் அமையவேண்டும் என்ற நோக்குடன் அம்மாவட்டங்களில் நியமிக்க பின்வரும் பதவிகளுக்குத் தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி: பிராந்தியப் பொறியியல் ஆலோசகர் *(வெற்றிடம் - 02)*

கல்வித்தகைமைகள்:
1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சிவில் பொறியியலாளருக்குரிய தகைமைச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும்.
2) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தினால் பட்டம்பெற்ற அங்கத்தவராகவும் அதன் பின்பு பொறியியல் முகாமைத்துவத்தில் 5 வருடத்திற்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட முன் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2) பதவி: மாவட்டப் பொறியியல் ஆலோசகர் *(வெற்றிடம் - 08)*

கல்வித்தகைமைகள்:
1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சிவில் பொறியியலாளருக்குரிய தகைமைச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும்.
2) 5 வருடத்திற்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட முன் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3)பதவி: பிரதேச பொறியியல் ஆலோசகர் *(வெற்றிடம் - 24)*

கல்வித்தகைமைகள:
1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் சிவில் பொறியியலாளருக்குரிய தகைமைச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
2) அங்கீகரிக்கப்பட்ட முன் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

4)பதவி: பிரதேச இணைப்பாளர் *(வெற்றிடம்-24)* NDT/HND

கல்வித்தகைமைகள்: ஐந்து வருட அனுபவம்

5)பதவி: நிர்வாக உத்தியோகத்தர்

கல்வித்தகைமைகள்: G.C.E O/L இற்குக் குறையாத தரத்துடன் ஐந்து வருட நிர்வாக அனுபவம் உள்ளவர்.

வயதெல்லை: 30 வயதிற்கு மேற்பட்டவர்

6) பதவி: கணக்காளர்

கல்வித்தகைமைகள்: B.Com./வணிகவியல் பட்டதாரி அல்லது அத்தரத்திற்குச் சமமான தகைமையுடைய 3 வருட முன்னனுபவமுள்ளவர்.

வயதெல்லை: 28இற்கு மேற்பட்டவர்.

✦ *சம்பளங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.*

இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

✪ விண்ணப்ப முடிவு திகதி: 2005-06-15

✪ விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி அத்துடன், தங்களது சுய விவரத் தரவுகளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு முடிவு திகதிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

**முகவரி: முகாமைத்துவப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் (பிறைவேற்) லிமிட்டட், பாரதிபுரம், கிளிநொச்சி.**

(459[illegible])(2[illegible]-11-34)

## மேல்மாகாண முதல்வருக்கு எதிரான விடயத்தில் ஜே.வி.பி. விடாப்பிடி!

கொழும்பு,மே31

மேல்மாகாணசபை முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேயிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த கோரிக்கையை ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் நிராகரித்துவிட்டது.

மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பது என்ற விடயத்தில் தமது கட்சியின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லையென்று ஜே.வி.பியின் மேல்மாகாணசபைக் குழுவின் தலைவர் வருண தீப்தி ராஜபக்ஷ உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜே.வி.பி. தலைவருடன் பேச்சு நடத்தியிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மேல்மாகாணசபை முதலமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் விட்டுக்கொடுத்துச் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் மேல்மாகாணசபையின் குழுத் தலைவர், மேல்மாகாண முதலமைச்ருக்கெதிரான விசாரணைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் விசாரணைகள்கூட ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை எனக் கூறினார்.

மேல்மாகாணசபை விடயத்தில் எந்த மாற்றமும் இல்லாத காரணத்தினால் ஜே.வி.பி. அது குறித்து எந்தக் கலந்துரையாடல்களையும் நடத்தவில்லையெனக் குறிப்பிட்ட அவர், எதிர்வரும் 20ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ள இந்தப் பிரேரணைக்கு ஜே.வி.பி. குழு ஆதரவளிக்குமென்று தெரிவித்தார்.

(க-8)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே31

இணுவில் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

(எ-2ட3)


### வீடுவளவு விற்பனைக்கு

**கொக்குவில் ஸ்ரேசனுக்கு எதிர்ப்புறம் உள்ள ஒழுங்கையில் நாலு பரப்புடன் கூடிய வீடு வளவு சகல வசதிகளும் கொண்டது விற்பனைக்குண்டு.**

*தொடர்புகளுக்கு:*

**இல. 356, 'ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 5648.**

(45950) (38-11-34-26)

**வாழக்கையாளர்களே...**

பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லப்

[illegible] T.P.: 021 222 2884

E.mail: moorthylazer@yahoo.com

(C-42566) (54-15)


## கல்லுடைக்கும் ஆலைகளின் விவரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம்,மே 31

யாழ்.மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலைகளின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்.உப பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரி விஜிதா சத்தியகுமார் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இந்நடவடிக்கையின்கீழ் மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலைகளின் விவரங்கள் கிராம ரீதியாக பெறப்பட்டு தொகுக்கப்படவுள்ளன.

(8-185-202)

## ஆள்கள் தேவை

எமது சைவ உணவகத்துக்கு -

- ✦ சுவீற் மேக்கர்
- ✦ சமையலாள்
- ✦ சமையல் உதவியாள்
- ✦ ரொட்டி போடுபவர்
- ✦ வெயிட்டர்
- ✦ ரீ மேக்கர்

ஆகியவற்றுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். உடனே நேரில் வரவும்.

**ஸ்ரீதாமோதர விலாஸ்**

(45986)(26-11-34) 403, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர்க் காணிக்கை

இணுவில் அறிவாலய நிர்வாக சபை உறுப்பினர்களாகிய எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி கனகாம்பிகை நல்லையா**

திரு.வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் க.வைத்திலிங்கம்**

திரு.ப.ஆனந்த மகேஸ்வரன அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவபாக்கியம் பதஞ்சலி**

ஆகியோரின் மறைவுக்கு வருந்துகின்றோம். அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். கண்ணீர்க் காணிக்கை செலுத்தி அஞ்சலி சமர்ப்பிக்கின்றோம்.

**அறிவாலயம்,**
**இணுவில்.**

(45906)(26-11-34)

## முதலாம் வருட இதய அஞ்சலி

மலர்வு 04 - 08 - 1937



உதிர்வு 11 - 06 - 2004

### அமரர் தில்லையர் குலவீரசிங்கம்

(ஓய்வுபெற்ற அரச கணக்காளர் - பிரதம லிகிதர்)

திதி: 31-05-2005

உயர் கல்விக் குலத்தில் பிறந்த உத்தமனே!
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
மாண்டும் புகழ் மங்கா மன்மதனே!
பாசமலராய் வாழ்ந்து மறைந்து
ஆண்டு பல சென்றாலும் ஐயாவே!
உம் நினைவு எம் நெஞ்சில் நிலைத்து இருக்கும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!*

**மனைவி, மகள்,**
**மருமகன், பேரன்,**
**சகோதரர்கள்.**

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (45816)(26-11-34)

## மரண அறிவித்தல்

### சடகோபன் சஞ்சீவன்

(HNB மன்னார்)

இல.7, அண்ணா வீதி, அன்புவழிபுரம், திருகோண்மலையைச் சேர்ந்த திரு.சடகோபன் சஞ்சீவன் அவர்கள் 29.05.2005 அன்று அகால மரணமடைந்தார்.

இவர் அல்வினா டிலக்ஷியின் அன்புக் கணவரும் ஏஞ்சலின் ஷமிந்தாவின் பாசமிகு தந்தையும் திரு.திருமதி சடகோபன் தம்பதியினரின் ஏக புதல்வனும் திரு.திருமதி ஜெபநாயகம் தம்பதியினரின் அன்பு மருமகனும் திருமதி தமயந்தி, திருமதி மேகலாவின் அன்பு சகோதரனும் டெரிக் டில்றுக்ஷன், Dr.சுபகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2005) மாலை திருமலையில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**உடுவில்**
T.P. 026 222 7272.

தகவல்:
திரு.A.S.ஜெபநாயகம்

(45992)(32-11-34-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நிமிட புகை இன்பம் - பல வருட நோய்த் துன்பம்

**பு**கைத்தல் ஒரு சமூகப் பிரச்சினை. புகை பிடிப்பவர்கள் பெரும்பாலும் ஆண்கள்தான் எனினும், பெண்களும் புகைபிடித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். 16ஆம் நூற்றாண்டுகளில் ஆரம்பித்த பழக்கம் இன்று உலகின் ஒரு கலாசாரமாக இனங்காட்டிக்கொள்ளும் வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற 11ஆவது உலக சுகாதார நிறுவன மாநாட்டில் வெளியிட்ட அறிக்கையில 9 வினாடிக்கு ஒருவர் என்ற வீதத்தில் புகைபிடிப்பதால் இறக்கின்றனர். இவ்வறிக்கையில் 2020ஆம் ஆண்டில் 1000 மில்லியன் பேர் மரணிப்பர் என்றும், இது HIV, கர்ப்பிணி மரணம், விபத்து, தற்கொலை போன்றவற்றைவிட மிஞ்சிவிடும். அத்துடன் புகைபிடிப்பவரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

**இன்று மே 31 சர்வதேச புகைபொருள் மறுப்பு தினமாகும். இதனையொட்டி 'போரூட்' யாழ்.மேற்குத்திட்டத்தின் நல்லொழுக்க செயற்றிட்டங்களுக்கான பங்காளர் நிறுவனமான 'சக்தி' அமைப்பினரால் தொகுக்கப்பட்ட ஆக்கங்கள் இங்கே பிரசுரமாகின்றன.**

ஏன், எதற்காகப் புகைபிடித்தலில் ஈடுபடுகின்றார்கள் எனில்,

- இளைஞர்களைப் பொறுத்தவரையில் அது ஒரு நாகரிகம், அதாவது 'தம் அடித்தல்' எனக் கூறுவார்கள். இதற்கு சினிமா ஒரு காரணமாக அமைகிறது.
- விளம்பரம் - சிகரெட்டிற்கான விளம்பரப் பெட்டியின் அழகு பார்ப்பவர்களை ஈர்க்கச் செயயும் தன்மையுடையதாய் இருத்தல்.
- சிலர் கூறும் கருத்து புகைத்தலில் ஈடுபட்டால் கவலையை மறக்கலாம்.
- இன்னொரு சாரார் கூறுவர் புகைபிடித்தால் புத்துணர்ச்சி ஏற்படும்.

விஞ்ஞானம் வளர்ந்தபோது 1950 இல் டொல என்பவரும் 1956 இல் கில் என்பவரும் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளே புகைபிடித்தல் நுரையீரல் புற்றுநோயை உண்டுபண்ணும் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தின.

சிகரெட் புகையில் 4000 இராசயனப் பொருளகள் உள்ளன. புகையிலையில் இயற்கையில் பல நச்சுப் பொருள்கள் காணப்படுகின்றன. இதனைப் பதனிடும் போது மேலும் பல நச்சுப் பதார்த்தங்கள் சேர்ந்துகொள்கின்றன.

புகைபிடிப்பதால் வரும் பிரச்சினைகளை-

- உடல், உள ரீதியான பிரச்சினைகள்
- சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் என

இருவகைப்படுத்தி நோக்கலாம்.

உடல், உள ரீதியான பிரச்சினை எனும்போது சிகரெட் உட்பட அனைத்துப் புகைபொருளும் 20 - 4000 வரையான இரசாயனப் பதார்த்தங்களை தம்முள் கொண்டுள்ளன. மனித உடல், உளம் என்பவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கின்றன. இராசாயனப் பதார்த்தங்கள் எனும் போது -

1.நிக்கொட்டின் (**Nicotine**).
2. காபன் மோனொக்சைட்டு (**Carbon - Monoxide**)
3.தார் (**Tar**)

இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றினால் ஏற்படும் பாதிப்புகள் எனும்போது-

❖ சாதாரண ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பத்தைப்போல மூன்று மடங்கு சந்தர்ப்பம் புகைபிடிக்கும் ஒருவருக்கு உண்டு.

❖ கர்ப்பிணித்தாய் புகைபிடிப்பதால் குறைப் பிரசவம், இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல் போன்றன ஏற்படும்.

❖ புகைபிடிக்கும்போது இதயத்துடிப்பு 15-25 தடவைகளால் அதிகரிக்கின்றது. குருதி அமுக்கம் ஏறத்தாழ 10-20 அலகுகளால் உயர்கின்றது.

❖ ஒரு சிகரட் புகைத்து முடிக்கும்போது ஒரு மனிதன் தனது ஆயுள்காலத்தில் 5½ நிமிடங்களை இழக்கின்றான்.

❖ சுவாசக்குழாயில் சளி ஏற்படுகின்றது.

❖ தொடர்ந்து புகைபிடிப்பதால் வயிற்றுப் புண் ஏற்படுகின்றது.

❖ மூளையிலிருந்து வரும் 'ஆப்டிக்' நரம்புகள் அதிகமாக புகைப்பிடிக்கும்போது பாதிக்கப்பட்டு கண்பார்வை மங்குகின்றது.

❖ நுரையீரல் புற்றுநோய் ஏற்படும்.

❖ இதயத்துடிப்பு ஒழுங்கின்மை, பசி உணர்வு குறைகின்றமை, நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, சுவை உணர்வுக்குறைவு என்பனவும் ஏற்படும்.

சமூக, பொருளாதாரப் பிரச்சினை எனும் போது ஒவ்வொரு சமூகங்களும் தனக்கென விழுமியங்கள், நெறிமுறைகள், பண்பாடுகளைக் கொண்டிருக்கும். உடல், உளரீதியான பிரச்சினைகள் சமூகப்பிரச்சினையாக வடிவெடுக்கின்றன.

மேலும் புகைத்தலினால் ஏற்படும் விளைவுகள் எனும்போது -

- அதிக பணம் விரயமாதல்
- அதிலிருந்து விடுபட முடியாமை.
- ஒருவர் புகைப்பதால் அருகில் இருப்பவருக்கும் பாதிப்பு.
- குடும்பத் தகராறுகள் ஏற்படுதல்.
- புகைப்பவர்களை தரக்குறைவாக சமூகம் உற்றுநோக்கல்.
- புகைத்தலில் ஈடுபடுபவர்களே மற்றவர்கள் புகைத்தலில் ஈடுபட தூண்டியாக இருத்தல். போன்றனவாகும்.

புகைபிடிக்கும் பழக்கத்தை விட, பல் முயற்சி செய்தும் விட முடியாது மேலும் தொடருபவர்களாக உள்ளனர். இவர்களுக்கான சிகிச்சை முறைகளாக-

◉ புகைபிடிக்கும் நண்பர் வட்டத்தை குறைத்தல் அல்லது தவிர்த்தல்.

◉ புகைபிடித்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுதல்.

◉ உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி செய்தல்.

◉ சாப்பாட்டில் பச்சைக்காய்கறியை அதிகமாகச் சேர்த்தல்.

◉ பசியுடன் இருப்பதைத் தவிர்ப்பது.

◉ புகைபிடிக்க தோன்றும் சந்தர்ப்பத்தில் இனிப்புச் சாப்பிடுதல்.

◉ சிகரட் ஒன்றை வாங்கிப்பற்ற வைத்து இரண்டு, மூன்று தம் இழுத்துவிட்டு அந்த சிகரட்டை கண்ணுக்குத் தெரியக்கூடிய இடத்தில் வீசிவிட்டு இருத்தல். இப்படியாக தொடர்ந்து சில தடவை செய்து வருவதன் மூலம் படிப்படியாக இப்பழக்கத்தை கைவிடல்.

◉ நான் புகைபிடிப்பதை விட்டுவிட்டேன் என்று அறிந்தவர், தெரிந்தவருக்கு சொல்லித் திரிதல். இவ்வாறு சொல்லித்திரியும் போது உடனடியாக கைவிடமுடியாவிட்டால் இரகசியமாக ஒன்று, இரண்டு பாவித்தாலும் காலப்போக்கில் கைவிடவேண்டி ஏற்படும்.

சமூக மட்டத்தாலும், அரசதரப்பினராலும் புகைத்தலை தடைசெய்யும் நோக்கில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்-

❒ புகையிலை உற்பத்தியைக் கட்டுப்படுத்தல்

❒ புகைப்பிடிக்காததோருக்கு பாதுகாப்பு வழங்குதல்.

❒ சுகாதாரக் கல்வியை விரிவுபடுத்தல்.

❒ புகையிலை உற்பத்தி/பாவனை பற்றிய நேரடியான, மறைமுகமான விளம்பரங்களை படிப்படியாக குறைத்தல். பின்னர் முற்றாகத் தடைசெய்தல்.

❒ புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புப்பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

❒ தொழில்செய்யும் இடங்கள், பொது இடங்களில் புகைத்தலைத் தடைசெய்தல்.

ஆகவே "புகைத்தல் இல்லாத உலகை நாம காணவேண்டும். அன்றேல் புகைத்தலைக் கட்டுப்படுத்தவேனும் முயற்சித்தல் வேண்டும்".

※

**செல்வி யோகேஸ்வரி நடராஜா**
**சமுகவியல்துறை விரிவுரையாளர்**

### சிந்தனைக்கு விருந்தாக...

★ **புகைத்தலைப் பகைத்தால் - வாழ்க்கை சுவைத்தலைத் தரும்**

★ **நெஞ்சுவரை நீ இழுக்கும் புகையில்; நஞ்சு இருக்கு நன்றாக அறிந்துகொள்.**

★ **சுடலை ஞானம் வந்து சுகமில்லை உடலைக் காக்க உடன் நிறுத்து புகைப் பழக்கம்.**

★ **ஆவியாய் வெளியேறும் புகை - உன் ஆவியையும் வெளியேற்றிவிடும்.**

★ **நெருப்பும் புகையும் நீறும் சாம்பலும் நினைத்துக்கொள் விரையும் சுடலைத் திடலை.**

# போர் ஓய்ந்து சமாதானச் சூழல் ஏற்பட்டும்கூட பின்தங்கிய கிராமங்களுக்கு விமோசனமில்லை

**செய்திக்கட்டுரை**
**பிரபா**

**போர்** அழிவிலிருந்து மீண்டெழுந்து குடாநாடு இப்போது சிலசில துறைகளில் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

போர் ஏற்படுத்திய பௌதிக வளசேதங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மீளக்கட்டி எழுப்பப்படுகின்றன.

அழிவடைந்த பிரதேசங்களை மட்டும் அபிவிருத்தி செய்வதுடன் நின்றுவிடாது எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.



குடாநாட்டில் இன்றும் பல கிராமங்கள் கவனிப்பா் இன்றி மிகப் பின்தங்கிய நிலையில் இருந்து வருகின்றன.

இந்தக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசோ அல்லது தொண்டு நிறுவனங்களோ முன்வரவேண்டும் என்பதே அந்தக் கிராம மக்களின் எதிர்பார்ப்பு.

-குடாநாட்டில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றுதான் வாதரவத்தை கிழக்கிலுள்ள பெரிய பொக்கனைக் கிராமம். இங்கு வசித்துவந்த மக்கள் தொன்றுதொட்டு குடிசைகளையே வீடுகளாகக் கொண்டுள்ளனர்.

குடாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில் இக் கிராமம் பின்தங்கிய கிராம்மாக விடுதலைப் புலிகளால் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. அங்கு முப்பது கல வீடுகளையும் ஒரு பாலர் பாடசாலையையும் விடுதலைப் புலிகள் அமைத்துக் கொடுத்திருந்தனர்.

இந்தக் கிராமத்துக்கு மாவீரர் ஒருவரின் நினைவாக 'அக்காச்சி' எழுச்சிக் குடியிருப்பு என்றும் பெயர் சூட்டியிருந்தனர்.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து குடாநாடு அரசுப்படைகளின் கைக்குமாறியது. இந்த அதிகார மாற்றம் நிகழ்ந்து 10வருடங்கள் ஆகிவிட்டன.

இந்தக் கிராமத்துக்கு எந்த விமோசனமும் கிட்டவில்லை. மின்சார வசதியோ, போக்குவரத்து வசதியோ, பொருள் விற்பனை வசதியோ எவையும் கிடைக்காத நிலையே இன்னும் காணப்படுகிறது.

53 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன. இவர்களில் முப்பது குடும்பங்கள் மட்டுமே கல்வீடுகளில் வசிக்கின்றன. ஏனையவர்கள் இப்போதும் ஓலைக் குடிசைகளிலேயே வாழ்க்கையை நடத்துகின்றனர்.

### கல்வி நிலை

பாடசாலை செல்லும் மாணவர்களின் நிலைமையும் பரிதாபமானது.

பல இன்னல்களுக்கு மத்தியில் தமது கல்வியை இடைநிறுத்தாது 70 மாணவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர்.

இவர்கள் பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்றால் ஒன்றரை மைல் தூரம் கடந்து போகவேண்டும்.

இதனால் நடந்து செல்லும் மாணவர்கள் அதிகாலையிலேயே பாடசாலைக்குப் புறப்பட்டால் தான் பாடசாலை ஆரம்பமாகும் நேரத்துக்குப் போய்ச்சேர முடியும்.



அநேகமான பள்ளிச் சிறார்கள் பாடசாலைக்கு நீண்ட தூரம் நடப்பதால் அழுது கொண்டே வீடு திரும்புகின்றனர் - என்று அவர்களது பெற்றோர்கள் கூறுகின்றனர்.

வீதியிருந்தும் வாகனப் போக்குவரத்து வசதிகள் எவையும் கிடையாது. இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி நீண்டகாலமாக சேதமடைந்துள்ளது. அதனைத் திருத்துவதற்கு இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இக்கிராமத்துக்கு யாராவது ஒரு நாளைக்கு ஒரு தடவையேனும் பஸ்சேவை நடத்தமாட்டார்களா? என்று மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

குடிதண்ணீருக்காகவும் பெரும் போராட்டம் நடத்தவேண்டி உள்ளது.

குடிதண்ணீர்த் தாங்கி ஒன்று பொதுவான இடம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது. காலை மாலையும் இந்த நீர்த்தாங்கிக்கு பவுசர் மூலம் நீர் எடுத்துவந்து நிரப்பப்படுகின்றது.

நீர்த்தாங்கி மூலம் கிடைக்கும் குடிதண்ணீர் மக்களுக்குப் போதாது.

இதனைவிட அவர்களின் அன்றாடத் தேவைகளுக்காக அங்கு ஒருசில நன்னீர் அல்லாத உவர்நீர் கிணறுகள் உள்ளன. அவற்றையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது றோட்டறிக் கழகம் இக்கிராமத்தை பின்தங்கிய கிராமமாகத் தெரிவுசெய்து சில வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

10 மலசல கூடங்களையும் ஒரு பொதுக் கிணற்றையும் அமைத்துக் கொடுத்துள்ளது. 35 வீடுகளுக்கு சூரிய மின்கலங்களையும் பொருத்திக் கொடுத்துள்ளது.

இதேவேளை, பட்டினிக்கு எதிரான நிறுவனமும் சில உதவிகளை வழங்கியுள்ளது.

நகர அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதுடன் நின்றுவிடாது குடாநாட்டின் பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கும் விரிவான திட்டம் அவசியம். அக்காச்சி கிராமமும் அதில் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

✲

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திரசம் ததும்பும் ஒலி நாடாக்கள் சினிமா மோகத்தைத் தவிர்க்க உதவும்



வலி.தெற்கு,மே31

சினிமா மோகத்தில் சிக்கி சீரழியும் எம் சமூகத்தினிடையே பக்திரசம் ததும்பும் ஒலி நாடாக்கள் மாற்றங்களை ஏற்படுத்தும், இத்தகைய ஒலி நாடாக்களின் வெளியீடு, எம் கோயில்களின் பெருமைகளை உலகறியச் செய்வதோடு, எம் இளைய சமுதாயத்தையும் பக்தி நெறிக்குள் அழைத்துச் செல்லும். 'சமுதாயத்தைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் எமது ஆலயங்கள், திருமண வீடுகள், கூட்டங்கள் போன்றவற்றில் பாடல்கள் ஒலிக்க விடப்படுகின்றன. இவற்றால ஏற்படும் பெரிய இடர்கள் ஒலிநாடாக்களை




வெளியிடுவதன் மூலம் குறைக்கப்படுகின்றன.'

கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய சப்பரத் திருவிழாவிலன்று "அருளானந்தம்" ஒலிநாடாவை வெளியிட்டுவைத்து உரையாற்றிய பிரபல எழுத்தாளர் பிரம்மஸ்ரீ சி.சிவ சரவணபவன் (சிற்பி) இவ்வாறு கூறினார்.

லண்டனில் வாழும் கந்தரோடைவாசியான செல்லத்துரை மகேந்திரராசா இந்த ஒலி நாடாவை தொகுத்தமைத்து வழங்கியிருந்தார்.

எஸ்.பி பாலசுப்பிரமணியம், சீர்காழி சிவ சிதம்பரம் உள்ளிட்ட தென்னிந்திய பின்னணிப் பாடகர்களால் பாடல்கள் பாடப்பட்டிருந்தன.

சிவசரவணபவன் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

ஒலிநாடாக்களை மக்கள் தத்தம் வீடுகளில வைத்து தேவையான நேரத்தில், தேவையான பாடல்களை தேவையான அளவில் போட்டு கேட்பதன் மூலம் மனதை மகிழ்வுடன் வைத்திருக்கலாம்.

தமிழ் மொழியில் இறைவனை வழிபடலாமா என்பது இன்று எழுந்துள்ள ஒரு பிரச்சினை. இறைவனை வழிபட மொழி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தடையாக இருந்ததில்லை. எமது குறைபாடுகளைத் தமிழ்மொழியில்தானே இறைவனிடம் கூறிப் பரிகாரம் தேடுகிறோம். இறைவனும் எமது மொழியைப் புரிந்து கொண்டு தானே வேண்டுதல்களை நிறைவு செய்கிறார். தமிழ்மொழியில் இறைவனை தாராளமாக வழிபடலாம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் இறைவனால ஆட்கொள்ளப்பட்ட ரிஷிகள், முனிவர்கள் ஆலயங்களில் நடைபெறவேண்டிய கிரியைகளை பற்றி வடமொழியில் கூறிவைத்தமையால்தான இன்றும் ஆலயங்களில் கிரியைகள், பூசைகள் என்பன வடமொழியில் இடம்பெற்று வருகின்றன.

"அன்பால் அர்ச்சனை செய்வது பாடல்கள் மூலம் என்றும் அதனை நீ என்மீது சொற்றமிழில பாடு" என்றும் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் கூறவில்லையா? எனவே, எமக்கு எந்தெந்த மொழிகள் தெரியுமோ அவற்றினால் இறைவனை வழிபடலாம். தமிழில் பாடி இறைவனை வழிபட "அருளானந்தம் ஒலிநாடா" எமக்கு பெரிய உதவியாக அமையும் - எனக் கூறினார்.

வாழ்த்துரை வழங்கிய இசை ஆசிரியர் சி.சிவஞானராசா கூறியதாவது:-

ஆன்மீக ஞானம் மனிதனை வாழ வைக்கிறது. ஆலயம், பூமி, உடம்பு என்பவற்றில் இருந்து எழுகின்ற ஞானத்தை உணர்ந்தமையால்தான் செல்லத்துரை மகேந்திரராசா இவ்வரிய பணியை செய்துள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ். திருவாகரன் பேசுகையில் -

இசை ஊடாக இறைவனை நினைக்க - வழிபட இதுபோன்ற ஒலிநாடாக்கள் வெளியிடப்படுவது அவசியம் என்றார்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு - சுந்தராம்பாள், சீர்காழி கோவிந்தராஜன், ஜி.என்.பாலசுப்பிரமணியம், தியாகராச பாகவதர் போன்றோரின் பாடல்கள் எல்லாம் ஒலிப்பதிவு செய்யப்பட்டமையால்தான் இன்றும் நாம் கேட்டு மகிழ முடிகிறது. அதுபோல எமது ஆலயங்களின் பெருமைகளை எதிர்கால சந்ததியினர் உணரும் வகையில் பாடல்களாக ஒலிப்பதிவு செய்து கொள்வது அவசியம் எனக் கூறினார்.

நூலின் ஆய்வுரையை சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளையும், ஆசியுரையை சிவஸ்ரீ ம.தாணுநாதக் குருக்களும் வழங்கினர்.

(ப-152)

## மகிழ்ச்சியான சூழல்தான் மாணவர்களை மனம்விரும்பிக் கற்கச் செய்யும்



அச்சுவேலி,மே31

மாணவர்கள் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில கற்பதற்கான வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்கள் மனமகிழ்வுடன் விரும்பிக் கற்கின்ற சூழ்நிலையை உருவாக்கலாம்.

இவ்வாறு கூறினார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம்.

யாழ். கல்வி வலய ஆசிரியர் வளநிலையத்தின் "பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகள் 2005" முதலாவது செயலமர்வு அச்சுவேலி மத்திய கல்லூரியில் கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

செயலமர்வில் கலந்துகொண்டு யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தொடர்ந்து உரையாற்றும் போது:-

கற்றல் - கற்பித்தலுக்கான வளவசதிகள் அதிகரித்துச்செல்கின்ற போதிலும் மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் குறைவடைந்து செல்கின்றது. இந்தநிலை மிகவும் கவலை அளிப்பதாகும்.

மாணவர்கள் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் கற்பதற்கான வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மனமகிழ்வுடன் விரும்பிக் கற்கின்றபோது அடைவுமட்டத்தை மேம்படுத்தலாம்.


மாணவர்களுக்கான கற்றல் சூழ்நிலையை மகிழ்ச்சிகரமானதாக மாற்றி அமைப்பதற்கு தர உள்ளீடுகள், நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதியைத் திட்டமிட்ட முறையில பயன்படுத்தி உரிய நோக்கத்தை அடைய வேண்டும்.

தர உள்ளீடுகள் ரீதியில் கற்றல் சாதனங்களைக் கொள்வனவு செய்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்காமல் முடக்கிவைக்கின்ற நிலையைத் தவிர்த்து உரியமுறையில் பயன்படுத்தவேண்டும்.

ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் உத்திகளைக் கையாண்டு மாணவர்களுக்குக் கற்பிப்பதில் ஆர்வங்கொள்ளவேண்டும். ஆரம்ப வகுப்பு கற்பித்தலில் நவீன உத்திகளைப் பயன்படுத்தி மொழியறிவு, கணிதவிருத்திச் செயற்பாடுகளில் மாணவர்களை ஆர்வங்கொள்ளச் செய்யவேண்டும் - எனக் கூறினார்.

(ப-11-204)

## முன்மாதிரியாகத் திகழும் பண்ணாகம் பொது அமைப்புகள்



சுழிபுரம்,மே31

'பண்ணாகம் மக்களைப் பற்றி நான் நன்கு தெரிந்தவன். ஒற்றுமையுடையவர்களாகவும் எடுத்த எந்த ஒரு கருமத்தையும் சிறப்பாக செய்யும் ஆற்றல் உடையவர்களாகவும் விளங்குகின்றார்கள். இந்தக் கிராமத்தில் இயங்கும் சகல பொது அமைப்புகளும் ஏனைய கிராமங்களுக்கு முன்மாதிரியானவையாக விளங்கி வருகின்றன.

- இவ்வாறு பாராட்டினார் யாழ். மாவட்ட நீதிபதி த.விக்னராஜா. பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கப் பவள விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

விக்னராஜா மேலும் பேசுகையில்:-

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கம் கூட்டுறவுத் துறையில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. தங்கள் சொந்தப் பணத்தைக் கொண்டே செயற்படுவதால்தான் இது சாத்தியமாகின்றது. நாம் காணமுடிகின்றது. இவற்றுக்கு எல்லாம் ஒற்றுமையும் முதியவர்களிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களுமே காரணமாகும் - என்றார்.

விழா பண்ணாகம் ஸ்ரீமுருகன் அன்னதான சபை மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு சங்க உபதலைவர் ஆ.கதிரமலைநாதன் தலைமை வகித்தார். வடபகுதி கூட்டுறவு ஆணையாளர் மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

(ப-28)


**திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு**



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (43005)

தொடர்பு: நடணம், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.

(21-11-34)


**புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**கிளை முகாமையாளர் பதவி வெற்றிடம்**

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியான ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**கல்வித்தகைமை:**

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளத்திட்டம்:** 2700 - 4000 / 60 x 10-70 x 10

வயதெல்லை: 18-45 வரை

விண்ணப்ப முடிவு திகதி: 16. 06. 2005

(C/43114) (21-11-34)

பொது முகாமையாளர்
புங்.நயி.ப.நோ.கூ.சங்கம்.

**8ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 02 - 01 - 1964



உதிர்வு 31 - 05 - 1997

**அமரர் சிவகுரு யோகராசா**

(மின் ஊழியர், பிரதேசசபை, பளை)

நீங்கா நினைவுடன்:
கு.குணரூபன்

மீசாலை. (45995)(21-32-11-34)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 09 - 04 - 1932



மறைவு 01 - 05 - 2005

**திருமதி செல்வநாயகி மாரிமுத்து**

அன்பும் பண்பும் பாசமும் நேசமும் நிறைந்த
எங்கள் குடும்பத் தலைவியே! நீங்கள் மறைந்து
31ஆம் நாள் ஆனாலும் உங்கள் நினைவு மட்டும்
எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலவே அகலாது!

நாளை (01.06.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவபவனம்",
பன்னாலை, தெல்லிப்பழை.

பிள்ளைகள், மருமக்கள்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

மண்ணில் 03 - 02 - 1911



விண்ணில் 01 - 05 - 2005

**அமரர் இளையதம்பி சுப்பிரமணியம்**

(வேலணை கிழக்கு)

திங்கள் ஒன்று போனதோ இறைவனடி சேர்ந்து
நித்தம் நின்று நினைவூட்டுகின்றதே உங்கள் பாசப்பிணைப்பு

இன்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

▶ *தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

சு.கந்தஞானி
நியூ பிரியங்கா நகைமாளிகை,
இல.117/4, அம்பலவாணர் வீதி.
அத்தியடி. யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(45982)(50-11-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுத்துறையில் நடந்த உளவளப் பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி,மே31

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் சேவையாற்றும் தொண்டர்களுக்கான உளவளப் பயிற்சிப் பட்டறை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் உடுத்துறையில் அமைந்துள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் உப பணிமனையில் நடத்தப்பட்டது.

'யுனிசெவ்' நிறுவன நிதியுதவியுடன் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த அருட்சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பியின் குழுவினர் நடத்தினர். (எ-202)

## நீர்விநியோகத்திற்கு உதவி

கிளிநொச்சி,மே31

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நோயாளர் விடுதிக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் விநியோகம் செய்வதற்குப் பயன்படும் குழாய்கள் மற்றும் பொருள்களை வழங்கியுள்ளது.

நிறுவனத் திட்ட இணைப்பாளர் மு.குணரெடணம் அண்மையில் இந்தப் பொருள்களைக் கையளித்தார். (எ-202)

## திருவிழா

அளம்பில்,மே31

முல்லைத்தீவு அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி தொடக்கம் நவநாள் திருப்பலிகள் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து 12ஆம் திகதி நற்கருணை விழாவும் 13ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும் என்று ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு யூட் அமலதாஸ் தெரிவித்துள்ளார். (ப-416-203)

## 30 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதி

புளியங்குளம்,மே31

புளியங்குளம் ஆயப்பகுதியினர் பனிக்கநீராவிப் பகுதியிலுள்ள சுமார் 30 குடும்பங்களுக்குக் குடிதண்ணீர் வசதிகளை வழங்கி வருகின்றனர்.

மேற்படி கிராம மக்கள் பாதுகாப்பான குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பொதுக்கிணறு எதுவும் அங்கு இல்லை. இதன் காரணமாகவே ஆயப்பகுதியினர் இந்த நீர்வழங்கும் சேவையைச் செய்துவருகின்றனர்.

இவர்களின் இச்சேவை மூலம் அக்கிராம மக்கள் பயனடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-355-203)

## முல்லைத்தீவில் இன்றும் நாளையும் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி

கிளிநொச்சி,மே31

ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' ஓவியக் கண்காட்சியும் பயிலரங்கும் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கு முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியிலும் - நாளை முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியிலும் கண்காட்சி நடைபெறும்.

பின்னர், அதேதினங்களில் இரு இடங்களிலும் மாலை 4 மணிக்கு கருத்துப் பகிர்வு இடம்பெறும்.

இளம் ஓவியர்களுக்காக நடத்தப்படவுள்ள இந்தக் கருத்துப் பகிர்வில் அனைத்து இளைய ஓவியர்களும் கலந்துகொள்ளமுடியும்.

முல்லைத்தீவு மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஏற்பாட்டில் மேற்படி ஓவியக்கண்காட்சியும், கருத்துப்பகிர்வும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-203)




## பொருண்மிய மேம்படுத்தல் பயிற்சி

கிளிநொச்சி,மே31

சர்வதேச 'கெயார்' நிறுவனத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 35 பயனாளிகளுக்குப் பொருண்மிய மேம்படுத்தல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

வட்டக்கச்சியிலிருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் கடந்த 24ஆம் திகதி இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

நீர்முகாமைத்துவத்துடனான விவசாயம், மாற்றுச் சக்திப் பயன்பாடு, சூரியவலு, காற்றுவலுவின் பிரயோசனம், நாற்றுப்பண்ணை, பன்றி வளர்ப்பு, பல்லின கோழிவளர்ப்பு, பல்லின கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. (எ-202)

## குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள அலைந்து திரியும் தேவன்பிட்டி மக்கள்

வெள்ளாங்குளம்,மே31

மன்னார் மாவட்டம், தேவன்பிட்டி கிராமத்தில் நன்னீர் கிணறுகள் எதுவும் இல்லாமையால் அங்குள்ள மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேவன்பிட்டி கடற்கரையை அண்டி அமைந்துள்ள கிராமம். இதனால், இங்கு உவர்நீர்க் கிணறுகளே உள்ளன. இங்கு வசித்துவரும் 230 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமம் எதிர்கொள்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

மேற்படி கிராம மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் வகையில் முன்னர் இரண்டு தண்ணீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டன. இவற்றில் ஒன்று தற்போது பாவனையில் இல்லை.

தேவன்பிட்டி றோ.க.த.க. பாடசாலை வளவில் அமைக்கப்பட்ட தண்ணீர்த்தொட்டியே தற்போது பாவனையில் உள்ளது. இந்தத் தொட்டிக்குப் பாலியாற்றில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டுவரப்பட்டது. இந்த நீர்விநியோகத்துக்கென நிறுவப்பட்டுள்ள குழாய்கள் சீரின்மையால் குடிதண்ணீர் வீண்விரயமாகும் சந்தர்ப்பமும் உருவாகியுள்ளது. இதனால், போதியளவு குடிதண்ணீர் தேவன்பிட்டிப் பாடசாலைத் தொட்டிக்கு வந்துசேர்வதில்லை.

இதனால், ஏமாற்றமடைந்துள்ள தேவன்பிட்டி மக்கள், பல மைல் தூரம் நடந்து வெள்ளாங்குளம் சென்று குடங்களில் குடிதண்ணீரை எடுத்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, தேவன்பிட்டி மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவுசெய்ய சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-415-203)



தேவன்பிட்டிப் பாடசாலைக்குச் சொந்தமான நீர்த்தொட்டியில் குடிதண்ணீர் எடுப்பதற்கு மக்கள் காத்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

## பள்ளிவாசல் மீது தற்கொலைத் தாக்குதல் பாகிஸ்தானில் 18பேர் உடல் சிதறிப் பலி!

இஸ்லாமாபாத்,மே31

பாகிஸ்தானிலுள்ள வணக்க ஸ்தலம் ஒன்றில் நடத்தப்பட்டுள்ள தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் பலர் காயமடைந்திருப்பதாகவும் இவர்களில் அநேகரின் நிலைமை மிகக் கடுமையாக இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

தலைநகர் இஸ்லாமாபாத்தின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள ஷியா பிரிவு இஸ்லாமியரின் தொழுகை ஸ்தலமான பாரி இமாம் மசூதியில் நூற்றுக்கணக்கான ஷியா பிரிவினர் கூடியிருந்தனர். சமய விழாவொன்றின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இவர்கள் குழுமியிருந்தனர். குண்டுவெடிப்பில் 50 பேருக்கு மேல் காயமுற்றிருக்கவேண்டும் என்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் தெரிவித்தார்கள். சம்பவம் நடைபெற்ற இடம் ஒரு கொலைக்களம் போல காட்சியளித்தது. மனித உடல்களும், உடல் பாகங்களும் சிதறிக்கிடந்தன என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர்.



பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்களுக்கும் சனி முஸ்லிம்களுக்குமிடையில் நெடுங்காலமாகப் பிணக்கு இருந்துவருகின்றது.

இந்தத் தாக்குதலை யார் நடத்தியிருக்கிறார்கள் என்பதை இப்போதைக்கு அறுதியிட்டுக் கூறமுடியாது என்று பாகிஸ்தான் தகவல் அமைச்சர் ஷெயித் ரஷித் அகமத் கூறினார். தாக்குதலுக்கு எந்த ஒரு குழுவும் உடனடியாக உரிமைகோரவில்லை. (ப)

## ஆந்திர மாநிலத்தில் 2 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள்

ஐதராபாத்,மே31

இந்தியா ஆந்திரமாநிலத்தில் சுமார் 2 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று தொழிலாளர் ஆணையாளர் ராணி குமுதினி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐதராபாத் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை ஆந்திராவில் பெரும் பூகம்பமாக வெடித்து வருகிறது. மொத்தம் 2 லட்சம் குழந்தை தொழிலாளர்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களை மீட்க அரசு அதிரடி நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

பல மாநிலங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பல வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றாலும் அரசுகள் சட்டபடி நடவடிக்கை எடுத்துவருகின்றன. ஆனாலும் சில மாநிலங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகரிக்கத்தான் செய்கின்றனர். இதற்குக் காரணம் வறுமைதான். இந்த வகையில் ஆந்திராவில் அதிக குழந்தைத தொழிலாளர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-க)

உலக அரங்கில்

## 2ஆம் உலக யுத்தத்தில் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது சரியே

### அந்நாட்டு விஞ்ஞானி பீட்டர் லாக்ஸ் கருத்து

ஒஸ்லோ,மே31

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் மீது அணுகுண்டு வீசியது சரிதான் என அந்த அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டவர்களில் ஒருவரான அமெரிக்க விஞ்ஞானி பீட்டர் லாக்ஸ் கூறியுள்ளார்.

நோர்வே நாட்டின் புகழ்பெற்ற ஏபெல் விருது வழங்கும் வைபவத்தில் விருது வாங்குவதற்காக வந்திருந்தபோதே விஞ்ஞானி பீட்டர் லாக்ஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜப்பான் மீது அமெரிக்கா அணுவாயுதத் தாக்குதல் நடத்தவில்லையானால், இரண்டாம் உலகப்போரில் மேலும் பெருமளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும் என பீட்டர் லாக்ஸ் தெரிவித்தார்.

இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்கா அணுகுண்டு தயாரித்தது. மன்ஹட்டன் திட்டம் என அந்த அணுகுண்டு தயாரிப்புத் திட்டத்திற்குப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் உள்ள நியுமெக்சிகோவின் லாஸ் அலாமோவில் அந்தத் திட்டம் மிகவும் ரகசியமாகச் செயற்பட்டது.

அந்த அணுகுண்டு தயாரிப்புத்திட்டத்தில் நானும் ஒரு விஞ்ஞானியாக பணியாற்றினேன். அப்போது எனக்கு வயது 19.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது சரிதான் என்றே நான் கருதுகிறேன். அணுகுண்டும் வீசாமல் வேறு இராணுவ நடவடிக்கைகளை ஜப்பான் மீது அமெரிக்கா எடுத்திருக்குமானால், அதனால் மி[illegible] உயிர்ச் சேதம் ஏற்ப[illegible] - என்றார். (எ-க)

## நேபாளத் தேர்தலை பலகட்டங்களாக நடத்த மன்னர் ஜியானேந்திரா திட்டம்

காத்மண்டு,மே31

நேபாளத்தில் பல கட்டமாகத் தேர்தலை நடத்தப்போவதாக மன்னர் ஜியானேந்திரா தெரிவித்துள்ளார். எனினும், இதற்கான திகதிகள் எதையும் அவர் அறிவிக்கவில்லை.

நேபாளத்திலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார் மன்னர் ஜியானேந்திரா. கடந்த ஒரு மாதத்துக்கு முன்பாக 58 நகராட்சிகளுக்கு 2006ஆம் ஆண்டு ஏப்ரலில் தேர்தல் நடத்தும் திட்டத்தை அறிவித்திருந்த அவர், அதற்குப் பிறகு தற்போதுதான் தேர்தல் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், நகராட்சித் தேர்தல்களை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. "ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரவாதத்[illegible] ஜனநாயகத்தைக் காக்க உறுதி பூணவேண்டும்" - என்றும் அவர் கூறினார்.

ஜியானேந்திரா உரையாற்றுவதற்குச் சில மணிநேரத்துக்கு முன்னதாக தலைநகர் காத்மண்டுவில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. 7 கட்சிகளைக் கொண்ட கூட்டணி இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

அதேவேளை, பாக்லங் மாவட்டத்தில் மன்னர் ஜியானேந்திராவை எதிர்த்து போராட்டம் நடத்தியதாகக் கூறி 20 அரசியல் கட்சித்தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் -

ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டவேண்டும் எனக் கோரி 7 கட்சிக் கூட்டணிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் ஒரு பகுதி இதுவாகும் என்றும் -

50இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளை விடுவித்த நேபாள அரசு, நேபாள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஈஷ்வர் போக்ரெல்லை மீண்டும் கைதுசெய்துள்ளது என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வணிக நிறுவனங்களும் பொதுவிடுமுறை தினங்களும்; விதிமுறை அமுலாக்கலை கண்டறிய திடீர்சோதனை

யாழ்ப்பாணம்,மே31

வர்த்தக நிறுவனங்களைப் பொதுவிடுமுறை தினங்களில் திறப்பது தொடர்பான விதிமுறைகள் முறையாகக் கடைப் பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய திடீர்சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொது அமைப்புகளின் ஒன்றியம், வணிகர் கழகம், தொழில் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து இந்தத் திடீர்சோதனைகளை ஆரம்பித்துள்ளன.

பிரஸ்தாப மூன்று அமைப்புகளும் அண்மையில் கூடி ஆராய்ந்து, பொதுவிடுமுறைகளில் வர்த்தக நிறுவனங் களைத் திறப்பது தொடர்பான நடைமுறையை சகல வர்த தக நிறுவனங்களுக்கும் அனுப்பியிருந்தன.

இந்த நடைமுறைகள் உரியமுறையில் கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்பதைக் கண்டறிய திடீர்சோதனைகள் கடந்த 23ஆம் திகதி யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் திடீர்சோதனையில் 12 வர்த்தக நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

அன்றைய தினம் கடைகளில் பணிபுரிந்தோர் விவரம், அவர்களது சம்பள விவரம் ஆகியன தொடர்பான ஆவணங் களுடன் பிரஸ்தாப கடை உரிமையாளர்களை எதிர்வரும் 8ஆம் திகதி தொழில்திணைக்களத்தில் சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-3 202)

## சமய சந்நிதிகளில்

நீர்வேலி,மே31

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். (எ-17)

★ ★ ★

வடமராட்சி,மே31

பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கோவில் வருடாந்த பிரமோற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும். 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (த-173)

## ஒட்டகப்புலத்தில் இன்று திருவிழா

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் புனித அமலோற்பவமாதா ஆலயத்தின் வணக்க மாதத்திருவிழா இன்று செவ் வாய்க்கிழமை வழமைபோல் விருந்துடன் சிறப்பாகக் கொண்டாடப்படவுள் ளது. இன்று முற்பகல் 10.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி நடைபெறும்.

ஆலயத்திற்குச் செல்லவிரும்புவோரை இன்று காலை 8 மணிக்கு முன்னதாக புனித யுவானியார் ஆலய முன்றிலில் ஒன்று கூடுமாறும்- இலவச போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் - கூறப்பட்டது.

இவ்வாறு ஆலயத்துக்குச் செல்லவிரும்புவோரை தேசிய அடை யாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பவற்றைத் தவறாது எடுத்துவருமாறும் - கேட்கப்பட்டுள்ளது. (எ-203)

## புகைபொருள் ஒழிப்பு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே31

'போரூட்' நிறுவனத்தின் இணை அமைப்பான சக்தி அமைப்பின் அனுசரணையுடன் மயிலங்காடு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினரால் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு புகைபொருள் ஒழிப்பு தின நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வலி.தெற்குப் பிரதேச செயலர் ப.திருவாகரனும் கௌரவவிருந்தினராக வைத்திய நிபுணர் செல்வி ந.கனகரட்ணமும் சிறப்புவிருந்தின ராக யாழ். மேற்கு 'போரூட்' திட்ட இணைப் பாளர் அ.டெனியும் கலந்துகொள்ளவுள்ளனர். (த)

## பரீட்சைப் பணியில் மோ.வாகனங்கள்

யாழ்ப்பாணம்,மே31

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு இணைப்பு நிலையங்களுக்குப் பரீட்சை ஆவ ணங்களைக் கொண்டுசெல்ல மோட்டார் வாக னங்கள் வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளன.

மேற்படி பணியில் தமது வாகனங்களை இணைத்துக்கொள்ள விரும்புபவர்கள் அதற் குரிய படிவங்களை இன்று காலை யாழ். கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (எ)

## ஊழியர் சேமலாப நிதி மீளப்பெற விண்ணப்பித்தோருக்கு....

யாழ்ப்பாணம்,மே31

ஊழியர் சேமலாப நிதியை (E.P.F.) மீளப் பெறுவதற்கான விண்ணப்பத்தினைத் தொழில் திணைக்கழத்தின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைத்து 6 மாத காலத்திற்கு மேற்பட் டும், இதுவரை நிதி கிடைக்கப்பெறாதவர் களை 10-06-2005இற்கு முன்பாக யாழ். மாவட டத் தொழில் அலுவலகத்தில் தங்கள் பதிவு களை உடனடியாக மேற்கொள்ளுமாறு மாவட்ட உதவித்தொழில் ஆணையாளர் கே.கனகேஸ் வரன் கேட்டுள்ளார். (எ)

## மாம்பழம்,பலாப்பழம் விலைகளில் வீழ்ச்சி

அரியாலை,மே31

மாம்பழம், பலாப் பழம் போன்றவற்றின் சீசன் தற்போது ஆரம் பித்துள்ளது.

இதனால், சந்தை களில் அவற்றின் விலைகள் வீழ்ச்சி யடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, சாவகச சேரி, திருநெல்வேலி போன்ற சந்தைகளில் மாம்பழம், பலாப்பழம் போன்றன போதிய ளவில் விற்பனைக்கு வந்துள்ளன என்றும் - இதனையடுத்தே அவற்றின் விலைகள் சந்தையில் வீழ்ச்சி யடைந்துள்ளது என் றும் கூறப்பட்டது. (த-17)

## புகைத்தல் எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு இன்றுமுதல் கொடிவாரம் அனுஷ்டிப்பு

வட்டுக்கோட்டை,மே31

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு இன்று முதல் ஜூன் 6வரை கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சமுர்த்தித் திட்டத்தின்மூலம் அனுஷ்டிக்கப்படவுள்ள இந்தக் கொடி வாரத்தின்போது சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் புகைத்தல் எதிர்ப் புக்கொடிகள் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ்வாறு புகைத்தல் எதிர்ப்புத்தினக் கொடிவாரம் மூலம் சேகரிக்கப் படுகின்ற நிதி, வறிய குடும்பங்களை பல்வேறு சமுகரீதியான அபி விருத்தி நடவடிக்கையில் ஈடுபடுத்த பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (எ-161)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 04 - 05 - 1923



உதிர்வு 01 - 05 - 2005

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எமது குடும்பத் தலைவி

திருமதி நல்லையா வள்ளியம்மை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (31.05.2005) செவ்வாய்க் கிழமை காலை 7.30 மணிக்கு நயினாதீவு புனித காங்காதரணி தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து இன்று முற்பகல் 11.00 மணிக்கு சபீண்டீகரணக்கிரியைகள் எமது இல்லத்திலும் நடைபெறும். ஆகவே இந்நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (36008) (21-11-24) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியா

அரசரட்ணம் கந்தமூர்த்தி அவர்களின்

அன்பு மகன் அமரர் அகிலராஜ்

27-05-2005இல் அகால மரணமடைந்ததையிட்டு
பேரதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
(36012) (21-11-24) வட பிராந்தியம்.

## மரண அறிவித்தல்

திருமதி சேனாதிராசா மனோன்மணி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பளை)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பளையை வசிப்பிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்த வருமாகிய திருமதி சேனாதிராசா மனோன்மணி அவர்கள் 29.05.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற S.V.கந்தையா (அதி பர்) - சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும் செல்லப்பா சேனாதிராசா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் சாந் தினி (லண்டன்), சுபேதினி (லண்டன்), ராகினி (கிராம சேவையாளர், புலோப்பளை மேற்கு), சுலோ ஜினி (அமெரிக்கா), மாலினி (புத்தளம்), பவ தாரிணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற பிரதி அஞ்சல் அதிபதி - வடமாகாணம், லண்டன்), கலாநிதி ஆறுமுகம் (லண்டன்), இராமலிங்கம் (கோட்டக்கல்வி அதிகாரி - பளை), Dr.றோகான் குணசிங்கம் (அமெரிக்கா), நட ராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - புத்தளம்), ஜெயபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திரஜித் (கனடா), Dr.சுரேந்திரஜித் (கொழும்பு), நரேந்திரஜித் (பொறியியலாளர், கொழும்பு), டினேந்திரஜித் (லண்டன்), விமோஷன் (மருத்துவபீட மாணவன் - லண்டன்), ஆதீஷன் (லண்டன்), ரஜேன் (லண்டன்), நிஷான் (சென்.ஜோன்ஸ் கல்லூரி A/L மாணவன்), சங்கீத்தா (கனடா), யோனத்தான் ராகுல் (அமெரிக்கா), பிரியானந் (பொறியியல் பீடம், பேராதனை), தயோமி (புத்தளம்), ஆனோல்ட் (கனடா) ஆகி யோரின அன்புப் பேர்த்தியும் டினீதரா (லண்டன்), அபிஜித் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.06.2005) புதன் கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லூர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(36006) (32-11-24)

278, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 4591241

தகவல்:
சி.இராமலிங்கம் (மருமகன்)
கோட்டக்கல்வி அதிகாரி- பளை.

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள

ராமகிருஸ்ண சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்- மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி, (அரசடி வீதி)
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776 923623.

(36004)(23-24-11)

## உடுவில் மகளிர் கல்லூரி
## தமிழ் விழா – 2005

காலம்: 01-06-2005 (புதன்கிழமை)
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

மேற்படி நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் கலந்துகொண்டு சிறப் பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(சி-43120)(21-11-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பழநி கோயிலடி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்தவரான

கிரியாலங்காரமணி

சிவஸ்ரீ தம்பிப்பிள்ளை ரவிந்திரராஜா குருக்கள்

(பிரதம குரு, ஸ்ரீநாகபூஷணி அம்பாள் கோயில்.
கந்தர்மடம், மிஷன் வைரவர் கோயில்.
கோண்டாவில் கிழக்கு)

அவர்களுக்கு 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை
காலை 6 மணிமுதல் 7 மணிக்குள் வரும் சுபவேளையில் -
சிவபூஜாநிதி சிவஸ்ரீ வைரவநாதக் குருக்கள் (உரும்பிராய்),
சர்வசாதகம் – சிவஸ்ரீ கதிர்காமநாதக் குருக்கள் J.P.,
சிவஸ்ரீ சாமி ஸ்ரீஸ்கந்தக் குருக்கள்
ஆகியோரின் ஆசீர்வாதத்துடன்

குருப்பட்டாபிஷேகம்

மங்களகரமாக இறைவன் திருவருளால் நடைபெற்றது.
அவர் செய்கின்ற சேவை நல்லமுறையில் தொடர்ந்து நிகழ
எல்லாம்வல்ல இறையருள் வேண்டிப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

– கோண்டாவில் கிழக்கு வாழ். மக்கள்.

(36011) (24-11)

## REPAIRS

MONITOR
UPS
POWER SUPPLY
SCANNER

Virus Problems - PC servicing
Capture Card problems
Display problems
O/S problems
Software Installations
Memory errors
E-mail & Internet setup
Net-2-Phone configuration

LAPTOPS

Memory Problems
LCD Problems
Internet and Email Setup
Battery Problems
Power Pack Problems

Lap-top hard disk/Memory available for upgrading

Mobile Service
வீட்டிற்கு வந்து திருத்தித் தரப்படும்
உங்கள் அருகில் உள்ள கிளையை அணுகுங்கள்.

REPAIRS WITH GUARANTEE


அதிநவீன புத்தம் புதிய கணனிகள்
Visit our showrooms for best pricing
ரூ 37,000/= தொடக்கம்
Intel Celeron/P4 Computers
Also Avilable All Computer accessories
3 Years warranty

MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2225893 |
| நெல்லியடி | பிரதான வீதி நெல்லியடி,(பொலிஸ் நிலையடிருகில்) |
| கிளிநொச்சி | கனனி மையம், யாழ் சாலை, (கந்தசாமி கோவிலருகில்) கிளிநொச்சி |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| கொழும்பு - 06 | 15, 36வது ஒழுங்கை வெள்ளவத்தை |
| கொழும்பு - 13 | 82, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். தேர்தல் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்ட அரச அதிகாரிகளை முதலாவது படத்திலும் யாழ். அரச அதிபர் கே.கணேஸ், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், கி.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் :பிரபா)


## திருமண முகூர்த்தம் மாற்றம்

2005.06.01 ஆம் திகதி புதன்கிழமை வட்டு. இந்து வாலர் சங்கத் திருமண மண்டபத்தில் எமது புதல்வன் சுரேஸிற்கும் எமது புத்திரி லோஜினிக்கும் நடைபெற இருந்த திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 01.07.2005 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12 மணி முதல் 1.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மேற்படி திருமண மண்டபத்தில் நடைபெறும் என்பதை இறைவன் திருவருளை முன்வைத்து அறியத்தருகின்றோம்.

*இரு வீட்டார் அறிவித்தல்*

திரு.திருமதி லோகேந்திரன்,
கற்சிலைமடு,
ஒட்டிசுட்டான்.

திரு.திருமதி க.கிருஷ்ணமூர்த்தி,
வைத்தியசாலை வீதி,
மூளாய், சுழிபுரம். (36013)(29-17-15-12)


## வலி.தென்மேற்கில் சுற்றாடல் குழு

யாழ்ப்பாணம்,மே31

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உயர் மட்டக் குழு அமைக்கப்படவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்படவுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபைக் குழுவிற்கு 8 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேற்படி குழுத் தெரிவு எதிர்வரும் வியாழக் கிழமை இடம்பெறும்.

இக்குழுவில் பிரதேச சபைத் திட்ட அலுவலர்களும் மத்திய சுற்றாடல் சபை அலுவலர்களும் அங்கம் பெறுவர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

(ஓ-185)


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக கிராம அலுவலர்
திருமதி இராகினி இராமலிங்கம் அவர்களின்
அன்புத் தாயார் ஓய்வுபெற்ற ஆசிரியை
**திருமதி சேனாதிராசா மனோண்மணி**
அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம். உதவிப் பிரதேச செயலரும்.
பிரதேச செயலகம். அனைத்து உத்தியோகத்தர்களும்.
பச்சிலைப்பள்ளி. பளை. (36026)(29-17-15-12)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.தாதியர் பாடசாலையில் சிகிச்சைக் களப்
போதனாசிரியராகக் கடமையாற்றும்
திருமதி K.சிவலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரி காலஞ்சென்ற
**திருமதி இராசரத்தினம் நாகரத்தினம்**
அவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள், தாதிய மாணவர்கள்,
மாணவ குடும்பநல உத்தியோகத்தர்கள்,
(36028)(29-12-17-15) அலுவலர்கள், ஊழியர்கள்.

## விற்பனையாகிறது

இலங்கை மத்திய வங்கி
ஆண்டறிக்கை ~2004
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-43125)(29-17-15-12)

## தவறிவிட்டது

மெலிஞ்சிமுனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரகாசம் யோண்பிள்ளை என்பவருடைய சுனாமி நிவாரண முத்திரையும் சமுர்த்தி வங்கிப் புத்தகமும் யாழ்.நகரை அண்டிய பகுதியில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் -

**றோயல் றெஸ் கவுஸ்**
இல.207,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. : 0777 110121, 021-4590671 எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (36027)(29-17-15-12)

## 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்



அமரர்
**செல்லப்பா விஜயரட்ணம்**

எமது சிரேஷ்ட விரிவுரையாளரும் சித்த மருத்துவ மாணவ ஒன்றியத்தின் பெரும் பொருளாளருமாகிய திருமதி வி.சத்தியசீலன் அவர்களின் அன்புத் தந்தை

**செல்லப்பா விஜயரட்ணம்**

அவர்கள் காலமானதையிட்டு 31 ஆம் நாளாகிய இன்று எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்ினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,
(36024)(29-17-15-12) யாழ். பல்கலைக்கழகம்.

## திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C-42899)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிமுத்து சிவலிங்கம்

உடுப்பிட்டி வாசிகசாலையடியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சிவலிங்கம் நேற்று (30.05.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - நல்லம்மா ஆகியோரின் மகனும் ஜெயலக்ஸ்மிதேவியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி (கனடா), சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வரத்தினம் (கனடா), காலஞ்சென்ற சோதிலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற மதனிகா, தர்சினி, வசந்தகுமார், சிவநேசன், அமுதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணேந்திரன் (குணம் மில் - மீசாலை) காலஞ்சென்ற உருத்திரநாதன் மற்றும் தங்கலக்ஸ்மி ஞானம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரத்மினி (ஆஸ்திரேலியா), மோகன்ராஜ் (கனடா), ஜெரமி (கனடா), தேனுஜா (கனடா), அனோஜா (கனடா), மயூரதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கலைமகள், லகுசாந், துவந்திகா, மயுரதன், அனுஷன், கஜீபா, துஷ்யந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2005) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மீசாலை மேற்கு,* சி.சிவநேசன் (மகன்),
*மீசாலை.* (சி-43129)(29-12-17-15) கு.குனேந்திரன் (மருமகன்).

### மயில்வாகனம் சடாச்சரலிங்கம்

சாவகச்சேரி, ஹென்ஸ்மன் லேனைப் பிறப்பிடமாகவும் பெரிய கடை, மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சடாச்சரலிங்கம் 28.05.2005 சனிக்கிழமை மன்னாரில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் பரமேஸ்வரியின் பாசமிகு மகனும் பவாவின் அன்புக் கணவரும் வினோஜா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2005) செவ்வாய்க் கிழமை மன்னாரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
*ஹென்ஸ்மன் லேன்,*
*சாவகச்சேரி.* (சி-43126)(29-12-17-15) சகோதரர்கள்.

### கந்ததாஸஐயர் ஷண்முகநாதக்குருக்கள்

கோப்பாய் வீரபத்திரர் கோயலடியைச் சேர்ந்தவரும் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்னாள் சிவாச்சாரியாருமாகிய கந்ததாஸஐயர் ஷண்முகநாதக்குருக்கள் அவர்கள் நேற்று (30.05.2005) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்ததாஸஐயர் - நாகம்மா தம்பதிகளின் ஏக புதல்வரும் காலஞ்சென்ற துரைச்சாமிஐயர் - லலிதாம்பா ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற ஸ்ரீமதி சாந்தாதேவியின் அன்புக் கணவரும் உமாகாந்தன் (ஓய்வுபெற்ற தபால் அதிபர், ICRC மட்டக்களப்பு), ஸ்ரீதரன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்), சதானந்தன் (முன்னாள யாழ்/வயம்ப/தென்கிழக்குப் பல்கலைகழக உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்கையர்க்கரசி, சசிகலாதேவி, பத்மலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவஷாந்தி (U.K.), வித்யாசரணன் (இந்தியா), கலாதரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), மணிவண்ணன் (H.N.B. அக்கரைப்பற்று), மதிவதனன், ரிஷிகேசன் (Asian Paint, யாழ். இரும்பகம் யாழ்ப்பாணம்), குமாரதாஸ், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி இல்லத்தில் இன்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
*இல.139, கிராம விஸ்தரிப்புத் திட்டம்,* குடும்பத்தினர்.
*பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.* (36023)(29-17-15-12)

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம்,
ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அழகிய அழகு
காலை நேரம்: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா,
வடிவேல், நாசர்
நடித்த



காட்சிகள்:
11.00, 3.00, 7.00
(பு.நே.)
சந்திரமுகி (சிவ்ஸ்)

## மனோகரா யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா,
ரகுமான், சரண்யா மற்றும் பலர் நடித்த
ராம்
காட்சி நேரம்: 10.30 a.m., 2.30 p.m.,
6.30 p.m., 9.30 p.m.

## ராஜா யாழ்ப்பாணம்.

புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஷ்மி,
சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
காட்சி நேரம்: 10.30,2.30,
(பு.நே.)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை செல்லத்துரை



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (29.05.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் இராசா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் சிவராஜசிங்கம் (இலங்கை), சற்குணசிங்கம் (சுவிஸ்), ரவீந்திரராணி (இலங்கை), சிறிராஜசிங்கம் (சுவிஸ்), ஜெயராஜசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற நிர்மலராணி, ஜெகதாசன் (டென்மார்க்), சுதாராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:
*கந்தரோடை மேற்கு,* செ.சிவராஜசிங்கம்
*சுன்னாகம்.* (36039)(29-17-15-12) (மகன் - பவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம்

# கல்வி, சுகாதாரம், போக்குவரத்து முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்துக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியை இவ்வாண்டு எந்தெந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வதென ஆராய்வதற்கான யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், சி.சிவநேசன், மா.க.ஈழவேந்தன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இவ்வாண்டு யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகியவற்றை விருத்திசெய்வதற்கு முக்கியவத்துவம் அளிப்பதென இறுதியில் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக, குடாநாட்டிலுள்ள முன்பள்ளிகள் சீராக இயங்காமல் உள்ளமை அதற்கு கற்பிக்கப்படும் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குத் தீர்வு காண்பதற்குக் கல்வியமைச்சுடன் கலந்துரையாடித் தேவையான மேலதிக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்தனர். அத்துடன் குடிதண்ணீர், போக்குவரத்து ஆகியவற்றை விருத்திசெய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக உரிய அமைச்சுகளுடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முடிவுசெய்யப்பட்டது.

இவை தொடர்பாக விரிவாக மதிப்பீடு செய்வதற்கான கூட்டங்கள் எதிர்வரும் 13 ஆம் திகதிக்குப் பின்னர் நடைபெறவுள்ளன. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் திணைக்களங்கள் ரீதியாகச் சந்தித்துத் தேவைகளை இனங்கண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-8-7)

## புத்தர்சிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறையாளர்களுமல்ல வன்முறையை விரும்புபவர்களுமல்ல. வன்முறை எங்கள்மீது திணிக்கப்பட்டால் அகிம்சை வழியில் சத்தியத்தின் வழிநின்று அதனை எதிர்ப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

எனவே, எமது கோரிக்கையினை ஏற்று 02.06.2005 வியாழக்கிழமைக்கு முன்னர் நீதிமன்றத் தீர்ப்பினை அமுல்படுத்தி திருமலை மண்ணில் அமைதியை நிலைநாட்டுமாறு வேண்டுகிறோம். அதைவிடுத்து இராணுவ மயமாக்கல் மூலம் எங்கள் கோரிக்கையினை மழுங்கடிக்க நினைத்தால் 03.06.2005இலிருந்து சத்தியத்தின் வழியில் சாத்வீக முறையில் எங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை தொடர்ந்து எதிர்ப்பினைத் தெரிவிப்போம். எமது போராட்டத்தில் அனைத்துத் தமிழ்பேசும் மக்களையும் இணைந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது. (ஒ)

## ரூ.2.5 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மதிப்பு சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இருக்குமென்றும்-

குறிப்பிட்ட வீட்டின் அருகே பயிரிடப்பட்ட கஞ்சாச் செடிகளே அறுவடைசெய்யப்பட்டுப் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததாகவும் - கொடிகாமம் பொலீஸார் தெரிவித்தனர். கொடிகாமம் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் முன்னர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-74-31)

(படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## மாங்கேணி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குறித்த பொருள்களைக் கொண்டு செல்வதற்கு மாங்கேணி இராணுவ முகாமில் வைத்தே படையினர் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

இதனால், இம்முகாமுக்கு அப்பாலுள்ள கிரிமிச்சை, மதுரங்கேணிக்குளம், பனிச்சங்கேணி, சல்லித்தீவு, தட்டுமுனை, வாகரை, ஊரியன்கட்டு, பால்ச்சேனை, வம்மிவெட்டுவான் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கட்டடப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்குப் படையினர் விதித்துள்ள தடைகளினால் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவந்த ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளும் தடைப்பட்டுள்ளன.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வாகரைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது பாடசாலைகளில் அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுவந்த கட்டட நிர்மாண வேலைகளும் இத்தடையால் பாதிக்கப்பட்டுள்ளன.

யுத்தநிறுத்தம் நடைமுறையில் உள்ள இக்காலப்பகுதியில் படையினர் புதிதாக விதித்துள்ள தடைகளை நீக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டே இன்றைய ஆர்ப்பாட்டம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.(க)

# ஊடகவியலாளர் சுனந்தவின் சாரதி நேற்று சுட்டுக்கொலை!

அம்பாறை வீரமுனையில் நேற்று அதிகாலை பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்றின் சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இவருடன் வந்த மற்றொருவர் காயமடைந்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

வாகனத்தின் சாரதியான என்.சி.பௌசான என்பவரே உயிரிழந்தவராவார். இவர் பிரபல ஊடகவியலாளரும் சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்தவருமான சுனந்த தேசப்பிரியவின் வாகனச் சாரதியும் ஆவார்.

அவரது சக பயணியான என்.எம்.பவாஸ் என்பவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இருவரும் குருநாகல் இக்பாகமுவ என்ற இடத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அம்பாறை - கல்முனை வீதியில் வீரமுனை என்ற இடத்தில் அவர்கள் பயணம் செய்த வான் கவிழ்ந்து கிடந்தது.

வாகனம் விபத்துக்குள்ளானதில் இவர் உயிரிழந்திக்கக்கூடும் என்று முதலில் கருதப்பட்டது. ஆனால், அவரது கழுத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது என்று பிரேதப் பரிசோதனை நடத்திய கல்முனை ஆதார வைத்தியசாலை டாக்டர் கே.ஆர்.சசீந்திரன் தெரிவித்தார்.

வாகனத்தைக் கொள்ளையிடும் நோக்கத்தோடு இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்காலம் என்று பொலீஸார் தெரிவித்தனர். (க)

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கமான தீர்வு ஒன்றுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத்தடவை - தற்போது - இந்தப்பதவியை இரா.சம்பந்தன் எம்.பி.சுமார் ஒருவருடகாலமாக வகித்துவருகின்றார்.

அடுத்து இந்தப்பதவி ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அல்லது கஜேந்திரகுமாருக்கு வழங்கப்படக்கூடும் எனத்தெரிகின்றது.

அண்மையில் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியில் கலந்துரையாடியபோதும் இதுகுறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாக அறியவந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவி சுழற்சிமுறையில் கைமாறும் திட்டம் தொடர்பாகத் தற்போதைய தலைவர் சம்பந்தனின் கருத்து என்னவென்பது இன்னும் தெரியவரவில்லை. (க)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, அமீரலி, ரிசாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், பிரதியமைச்சர் ஹுசைன் பைலா ஆகியோர் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான நிமல சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரட்ன, பிரதியமைச்சர் டிலான் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ, அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி விரிவாக இங்கு பேச்சுகளை நடத்தினார் எனத் தெரிகிறது. இந்தப்பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டுமென்றும் - குறிப்பாக பிராந்தியக் குழுவில் விடுதலைப் புலிகளும், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் சமமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் - ஜனாதிபதியிடம் வலியுறுத்திய முஸ்லிம பிரதிநிதிகள், பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் அரசும், விடுதலைப் புலிகளும் மட்டும் கைச்சாத்திடாமல் முஸ்லிம்களின் சார்பில் பிரதிநிதியொருவர் கைச்சாத்திடுவதற்கான வழியை ஏற்படுத்தவேண்டுமென்வும் கேட்டுக்கொண்டனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துவார் என ஜனாதிபதி உறுதியளித்த அதேசமயம், வெகுவிரைவில் அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் பேச்சுகளைத் தாம் நடத்தப்போகின்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டின்படி-

★ தேசிய மட்டத்தில் அமையும் உயர் குழுவில் ஒரு தமிழர், ஒரு முஸ்லிம், ஒரு சிங்களவர் என சம இடம் சகல இனத்தவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

★ அரசுத்தரப்பில் ஐவர், புலிகள் தரப்பில் ஐவர் என மாகாண (பிராந்திய) குழுவில் மொத்தம் 10 பேர் அங்குவர். அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் ஐவரில் மூவர் முஸ்லிம்களாகவும் இருவர் சிங்களவர்களாகவும் இருப்பர்.

★ மாவட்டக் குழுக்களில் மாவட்ட இன விகிதாசாரப்படி இனங்களுக்கு இடம் ஒதுக்கப் படும்.

- இதுவே அரசு - புலிகள் உடன்பாடு கண்ட ஏற்பாடு.

இதில்தேசியக்குழுவில் (உயர் சபையில்) வழங்கப்பட்டமை போன்று பிராந்தியக் குழுவிலும் புலிகளுக்கு வழங்கும் அதேயளவு பிரதிநிதித்துவம் தமக்கும் தேவை என முஸ்லிம் தலைவர்கள் தற்போது வலியுறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

## திருமலை புத்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வழக்கைத் தாக்கல் செய்வாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விவகாரம் தொடர்பாகப் பதற்ற நிலைமையைத் தணிக்கும் விதத்திலான இடைக்காலத் தடை நடவடிக்கை ஒன்றுக்கு நீதிமன்றத்தைக் கோரவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதேசமயம் - கொழும்பில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் சட்ட அனுமதியின்றி நகரப்பகுதி ஒன்றில் அமைக்கப்பட்ட இந்தப்புத்தர்சிலை விவகாரம் குறித்து திருகோணமலையில் உள்ள தமது அதிகாரிகளை அழைத்து கொழும்பில் ஆலோசனை நடத்தினார்கள் என்றும் -

முன் அனுமதிபெறாமல் கட்டப்பட்ட இந்தக் கட்டமைப்பை அகற்ற சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவதற்கு இந்த ஆலோசனை நடவடிக்கைகளின் போது முடிவு செய்யப்பட்டது என்றும் - அறியவந்தது. (க)

## காங். சிமெந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை ஆலையில் பொதிசெய்து குடாநாட்டில் விற்பனை செய்வது என்றும் -

இரண்டாம் கட்டமாக வெளிநாட்டில் இருந்து சிமெந்து தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் கிளிங்கரை இறக்குமதி செய்து அதனை காங்கேசன்துறை ஆலையில் அரைத்து பின்னர் பைகளில் அடைத்து விற்பனை செய்வது என்றும் - திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப்பணிகளை முன்னெடுக்க தொழிற்சாலையில் முன்னர் பணியாற்றிய ஊழியர்களை பணிக்கு அமர்த்தும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரியவந்தது.

பெரும்பாலும் அடுத்த மூன்று மாதங்களில் முதல்கட்ட வேலைகள் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிற்சாலையின் கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன என்றும்-

அங்கு உள்ள மூன்று முக்கிய இயந்திரங்களில் ஒன்று செயற்படக் கூடிய நிலையில் இருப்பதாக பொறியியலாளர்கள் தெரிவித்தனர் என்றும் - கூட்டுத்தாபனத் தலைவர் பந்துல கொழும்பில் தெரிவித்தார். (ஒ-3-206)

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு சுப்பிரமணியம்

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (30.05.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் சரஸ்வதியின் அன்புச் சகோதரனும் ஜெயலக்ஷ்மி, யோகராணி, தனலக்ஷ்மி (அமரர்), கனகாம்பிகை, கமலாம்பிகை, கதிரவேலு (பிரான்ஸ்), கௌரிமலர் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருட்செல்வம் (அமரர்), பாலசுந்தரம், இளங்கோபன், தவபாலன் (அமரர்), கணேசமூர்த்தி, நந்தா (பிரான்ஸ்), வேதநாயகம் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக வல்வை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.* (C/43131) (12-17-15-29)

தகவல்:
குடும்பத்தினர்.

## அமரர் பாலர் வேலுப்பிள்ளை



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் விசுவமடு 12 ஆம் கட்டையடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலர் வேலுப்பிள்ளை நேற்று (30-05-2005) காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் பாலசிங்கம் (கனடா), தர்மரத்தினம் (லண்டன்), சுந்தாணம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை), மாவீரர் மேஜர் முரளி (இரத்தினசிங்கம்), மாவீரர் தம்பி (இராசகோபால்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02-06-2005) வியாழக்கிழமை நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு கரதடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சர்வோதய வீதி,*
*ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.* (36081) (54-12-17-15-29)

தகவல்:
குடும்பத்தினர்.


**திருமணக்கார்**
குளிரூட்டப்பட்ட, நீளமான நிறைவான நிசான் சனி கார்
✲ சுபகாரியங்களிற்கும்,
✲ சுற்றுலாக்களிற்கும்
வாடகைக்குண்டு
(நகரப்புறக் கட்டணம் 2500/-)
T.P. 0777 - 283795
(36017) (54)

**நல்லூரில் தொடர்மாடி வீடுகள்**
அதிசயம்; ஆனால் உண்மை
வீடு ஒன்றின் விலை ரூபா 28 இலட்சம் மட்டுமே!
தொடர்பு:-
தயா ஏஜென்சி
இல.3, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி தொடர்பு இரவு 7.00 மணிக்குப் பின் மட்டுமே
T.P: 0777 - 283795
(36016)(54)

**NEW SCIENCE CENTRE**
யாழ்நகர்
A/L 2006
INORGANIC
பிரிவு III
Mon.,Wed. 3-4 p.m.
ORGANIC
Sat.,Sun. 12-1
PAPER CLASS Fri. 3-5 p.m.
(C/43133)
By: அன்பழகன் B.Sc.

**STUDY IN INDIA**
We Assist in Securing Admissions for Engineering Medicine Nursing Pharmacist, Physio Theraphy, Other Arts & Science Degree Programs.
**NN CONSULT**
Telephone: 5558833 Fax: 5558844
No.60, (First Floor) Peterson Lane, Colombo - 06.
E-mail: nnconsult@sltnet.lk
(C - 43121) (64)

**NEW SCIENCE COLLEGE JAFFNA**
2006 A/L CHEMISTRY
✲ இரசாயனச் சமநிலை ✲
திரு.மகேஸ்வரன் (B.Sc.PGD.M.PHIL(Edu.)
ஆரம்பம்: 02.06.2005 6.00 a.m.
Tue.Thu - 6.00 a.m.
(36022) (54)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
ஐ. நா
அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 03/06/2005 இற்கு முன் நேரில்
MCS
**இலவசக்கணனிப்பயிற்சி**
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகில்)
Supported By UNDP/IRRP Supported By UNDP/IRRP Supported By UNDP/IRRP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கல்விச் சுடர்

## Examination For Grade Five Students For Selection To School And For The Award of Bursaries - 2005

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 09**

**வினாத்தாள் - 1 நேரம் : 45 நிமிடங்கள்**


**1 - 3 வரையுள்ள வினாக்களில் முதலில் தரப்பட்ட படத்தோடு அல்லது பொருளோடு மிக நெருங்கிய தொடர்புடைய படத்தை ஏனைய மூன்று படங்களிலும் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

01.





(.........)

02.




(.........)

03.




(.........)

**4-6 வரையுள்ள வினாக்களில் புள்ளிக் கோட்டை நிரப்புவதற்குரிய சொல்லை அதன் கீழ் தரப்பட்ட நான்கு சொற்களிலும் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


04. நாம் தேவையான பொருட்களை ..................வாங்குகின்றோம்.
   (1) வீதியில் (2) தோட்டத்தில்
   (3) ஊரில் (4) கடையில் (...........)

05. மழை, வெயில் என்பவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்ற............... உபயோகிக்கின்றோம்.
   (1) தொப்பி (2) குடை (3) பொலித்தீன் (4) செருப்பு
   (............)

06. எக்கருமத்தையும் மனத்துணிவுடன் முயன்று செய்தால் .............. அடைவோம்.
   (1) களைப்பு (2) முயற்சி (3) புகழ்ச்சி (4) வெற்றி
   (...........)


**7-8 வரையுள்ள வினாக்களில் 'அ' பகுதியில் உள்ள உருவங்களின் தொடர்புகளுக்கு ஏற்ப 'ஆ' பகுதியின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான தொடர்புடைய உருவத்தைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

07.




(......)

08.




(......)


**9-11 வரையிலான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

09. பழங்களைச் சாப்பிடுவதற்கு முன்னர் கழுவிச் சாப்பிட வேண்டும் காரணம்,
   (1) பழங்கள் அழகாகவும் இனிமையாகவும் இருக்கும் என்பதால்.
   (2) நோய்க்கிருமிகள், அழுக்குகள் இருக்கும் என்பதால்.
   (3) சாப்பிடுவதில் நாம் சுத்தமானவர்கள் என்பதைக் காட்ட.
   (.........)

10. பகலில் நட்சத்திரங்கள் தெரிவதில்லை காரணம் ?
   (1) பகலில் வேறு இடத்திற்குச் சென்று விடும்.
   (2) நட்சத்திரங்கள் பகலில் ஒளி இழந்துவிடும்.
   (3) சூரியனின் பிரகாசமான ஒளி அதனை மறைத்துவிடுவதால்.
   (........)

11. விறகு அடுப்புகளில் சமைப்பது குறைந்துள்ளது காரணம்.
   (1) காட்டில் விறகு வெட்டுவதற்கு மிதிவெடிகள் தடையாக உள்ளமை.
   (2) விறகுத் தட்டுப்பாடு என்பதால்.
   (3) விறகுப் புகையால் வீடு அசுத்தமாகும் என்பதால்.
   (........)

**கீழே மூன்று மாணவர்களின் விருப்புப் பாடங்கள் தரப்பட்டு உள்ளன. அதனை அவதானித்துப் புள்ளிக்கோட்டில் சரியான விடையை எழுதுக.**




T - தமிழ்
S - விஞ்ஞானம்
M - கணிதம்
E - ஆங்கிலம்
P - உடற்கல்வி
A - ஆக்கம்
B - அழகியல்
C - சுற்றாடல்

12. மூவரும் விரும்பும் பாடம் / பாடங்கள் எது / எவை?
   ..........................................................................


13. நிருத்திகாவும் நிவேதிகாவும் மட்டும் விரும்பும் பாடம் எது?
   ..........................................................................

14. சர்வதேச மொழியாக விளங்கும் பாடத்தை யார் விரும்புகின்றார்?
   ..........................................................................

15. சுருதிகா விரும்பும் பாடங்கள் எத்தனை?
   ..........................................................................


**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

16. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் 'க' என்ற எழுத்துள்ள பக்கத்திற்கு எதிரான பக்கத்தில் உள்ள எழுத்து யாது-




(1) ப
(2) ம
(3) வ
(4) ச


17.





தரப்பட்ட சமநிலையில் உள்ள தராசின் படி எத்தனை வித்துக்கள் ஒரு மாம்பழத்திற்குச் சமனாகும்?

(1) 4 (2) 8 (3) 12 (4) 16



PROFESSIONAL TRAINING COURSES
DURATION
DIPLOMA IN OFFICE AUTOMATION 3 months
DIPLOMA IN DESKTOP PUBLISHING 3 months
DIPLOMA IN HARDWARE ENGINEERING 2 months
DIPLOMA IN COMPUTER APPLICATIONS 6 months
DIPLOMA IN WEB DESIGNING 3 months
DIPLOMA IN MULTIMEDIA (6 LEVELS) 1 Year
GLOBAL KIDS PROGRAM (Level 1& 2) 1 Year + 1 Year
INTERNET & E-MAIL 1000/=
(within 1 Week)
Quality EDUCATION with INTERNATIONAL recognised Certification
IMIS UK
Tally
FREE !!
PROGRAMING LANGUAGES
Visual BASIC 6, Visual BASIC.NET
JAVA, C++, ASP.NET & C#
50% OFF
ஒவ்வொரு பாடஅலகிற்கும் முழுமையான அழகிய புத்தகங்கள்
Jaffna District Franchise :
etouch COMPUTER SYSTEM
021-4590222
www.globalvillage-lanka.com
etouch@wow.lk
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. 


நிரோசனிடம் 50ml நீர்கொண்ட முகவை இருந்தது. அவன் முகவையில் 75 ml நீரைச் சேர்த்து பின்பு 50ml வெளியே எடுத்தான். அதன்பின் மீண்டும் 150ml நீரைச் சேர்த்தான். தற்போது முகவையிலுள்ள நீரின் அளவைக் காட்டும் படம் எது?



(1) (2) (3) (4)

19. 
தரப்பட்ட திண்ம வடிவம் மரக்கட்டைகளால் ஆக்கப்பட்டது. சகல கட்டைகளும் ஒரே அளவினதாகும். இதன்படி இதில் எத்தனை மரக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன?

(1) 5 (2) 6
(3) 10 (4) 11

20. 

இங்கே அருகில் நான்கு மரக்கட்டைகள் தரப் பட்டுள்ளன. அவை ஒவ்வொரு துண்டும் அதற்குக் கீழே உள்ள துண்டின் நிறையின் அரைவாசியாகும். துண்டு 4 இன் நிறை 3800g எனின் துண்டு 1இன் நிறை யாது?

(1) 950g (2) 425g (3) 1900g (4) 475g

**✱ கீழ்வரும் வினாக்களில் 'அ' பகுதியும் 'ஆ' பகுதியும் ஒரே மாதிரி எனின் 'ஆம்' எனவும் வேறுபட்டிருப்பின் 'இல்லை' எனவும் அடைப் புக்குள் எழுதுக.**

| | (அ) | (ஆ) | |
|---|---|---|---|
| 21. | AAABBCBAABCDA | AAABBCABAABDA | (.......) |
| 22. | 122333444221 | 122333444221 | (.......) |
| 23. | XXVXXVXXVXXX | XXVXVXXVXXX | (.......) |

**✱ கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழி ஒவ்வொன்றின தும் கருத்தைத் தருகின்ற மிகப்பொருத்தமான கூற்றின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

24. ஆழமறியாமல் காலை விடாதே.
1. ஆழமான இடங்களில் காலை விட்டால் அபாயம்.
2. எவரையும் ஆளைத்தெரியாமல் நம்பக்கூடாது.
3. ஒன்றின் இயல்பை அறியாது அதில் பிரவேசிக்கக்கூடாது.

25. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு.
1. யாருக்கும் அளவுக்குமேல் உதவக்கூடாது.
2. அளவு அறியாமல் உதவி செய்தால் கஷ்டப்படவேண்டும்.
3. வீண் செலவு செய்யினும் அச்செலவின் கணக்கை அறிந்திருந்தால் நன்று.

**✱ 26-30 வரையுள்ள வினாக்களின் அறிவுறுத்தல்களை நன்கு கிரகித்து அதற்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

26. A யிலும் பார்க்க B நிறை கூடியவர். A யும் C யும் சமநிறை உள்ளவர்கள். C இலும் பார்க்க D நிறை குறைந்தவர். இங்கு நிறை கூடியவர் யார்?
1. A 2. B 3. C 4. D

27. L.M.N.O.P ஆகியோர் வரிசையாக நிற்கின்றனர். N இற்குப் பின்னால் M நிற்கின்றார். N இற்கு முன்னால் O நிற்கின்றார். P யிற்குப் பின்னால் L உம், L இற்குப் பின்னால் O வும் நிற்கின்றனர். நடுவில் நிற்பவர் யார்?
1. L 2. O 3. M 4. N

28. நிருசனின் தொலைபேசி எண் ஐந்து இலக்கங்களைக் கொண்டது. இரண்டாம் இலக்கமும் கடைசி இலக்கமும் ஒற்றை எண்களாகும். முதலாம் இலக்கமும், மூன்றாம் இலக்கமும் இரட்டை எண்களாகும். நான்காம் இலக்கம் மூன்றாம் இலக்கத்திலும் 5 குறைவாகும். அவனுடைய தொலைபேசி எண் பின்வருவனவற்றில் எது?
(1) 43169 (2) 73165 (3) 43617 (4) 46387

29. நேற்றைக்கு முந்திய தினம் புதன் கிழமையாயின் நாளைக்கு அடுத்தநாள் என்னவாயிருக்கும்?
(1) வெள்ளிக்கிழமை. (2) சனிக்கிழமை.
(3) ஞாயிற்றுக்கிழமை. (4) வியாழக்கிழமை.


30. "இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும்" அது என்ன?
(1) கண் (2) மணிக்கூடு (3) வானொலி (4) நாய்


31. சூரியன் எப்பொழுதும் கிழக்குத் திசையில் உதிக்கும்.
(1) உண்மை (2) பொய் (3) கூறமுடியாது

32. நாம் உயிர் வாழ்வதற்கு நீர், வளி, உணவு மிக அவசியம். எனினும் வளி இல்லாவிடினும் உயிர் வாழலாம்.
(1) உண்மை (2) பொய் (3) கூறமுடியாது

33. இன்று வானத்திலே சந்திரனின் தோற்றம் தெரிந்தது. எனவே, இன்று பௌர்ணமி தினமாகும்.
(1) உண்மை (2) பொய் (3) கூறமுடியாது

**34-37 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள எண் தொடர்புகளைக் கண்டுபிடித்து அதற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய பொருத்தமான எண்ணை எழுதுக.**

34. 


35. 


36. 19, 25, 32, 40 ..........................

37. 1, 3, 7, 13 ..........................

**கீழ்க்காணும் வாக்கியத் தொடரில் நகைப்பிற்குரிய அல்லது புத்திக் குறைவைக் காண்பிக்கும் சொற்கள் அமைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடித்துக் கோடிடுக.**

38. மழை இன்றிப் பயிர்கள் வாடினால் அதிக உரம் உபயோகிக்கவேண்டும்.

39. சிங்கம் ஒரு தாவர பட்சணி ஆகையால் மிகத் தைரியமாயிருக்கிறது.

40. களியாட்டு விழாவில் மெல்லிசைக் குழுவினரின் இசையே சிறந்த கண்காட்சியாகும்.


# விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2007 பிரிவு 2இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ACC. திரு.பாலவாசன் ECO. திரு.உதயன்
LOG. திரு.சயந்தன் B.ST. திரு.முரளி (பிரிவு 1), திரு. யசோ (பிரிவு 2)
H/C. திரு.பத்மராஜா CHRI. திரு.வசந்தன்
HIN. திரு. N.T.தரன் GEO. திரு.பாபு
PLSA. திரு.ஸ்ரீரங்கநாத் HIST. திரு.பத்மன்
DRAMA. திருமதி TAM. திரு.குழந்தை (பிரிவு 1), திரு.லிங்கம் (பிரிவு 2)

O/L DAY CLASS பிரிவு 7, பிரிவு 7இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (8.30 - 2.30)
O/L EVENING CLASS பிரிவு 2 அனுமதி வழங்கப்படுகின்றது (4.00 - 6.00)
தரம் 6 தொடக்கம் 10 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
கணிதம்:- திரு.C.K.B. தயாளன், திரு. விக்கி. சமூகக்கல்வி:- திரு. K.சுதன், திரு. றொபின்சன்.
விஞ்ஞானம்:- திரு. N. தேவா, திரு. பாபு. சமயம்:- திரு. N.T.தரன், திரு. வசந்தன், செல்வி. கிருஷ்ணலதா
ஆங்கிலம்:- திரு. C. வில்வநாதன், திரு. செல்வரட்ணம். வர்த்தகம்:- திரு. K. கருணாகரன்.
தமிழ்:- திரு. விஜய், திரு. தயாபரன், செல்வி கிருஷ்ணலதா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாத்தாள் 2 நேரம்:1மணி15 நிமிடம்

**(1)பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்,
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்.

பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்றபோதும்,
உலகத் தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ளவேண்டும்.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது.

1. இப்பாடல்களுக்கு பொருத்தமான தலைப்பை எழுதுக.
 ..........................................
2. கல்வியை நாம் எவ்வாறு கற்கவேண்டும்?
 ..........................................
3. இவ்வுலகில் பெரியதாய் விளங்கும் தருமம் எது?
 ..........................................
4. 'உலகத்தோடு ஒத்து ஒழுகல்'.என்றால் என்ன?
 ..........................................
5. பாடலில் உள்ள இணை மொழியை எழுதுக.
 ..........................................
6. பலவும் படித்துப் பெறுவது எதனை?
 ..........................................
7. 'தருமம்' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லை எழுதுக.
 ..........................................
8. 'பெரிது' என்பதன் எதிர்க் கருத்துள்ள சொல்லை எழுதுக.
 ..........................................
9. பாடலில் உள்ள ஆண்பால் சொல்லை எழுதுக.
 ..........................................
10. முன்னிலைப் பெயர்ச்சொல்லை எழுதுக.
 ..........................................
11. 'பட்டம்' என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக.
 ..........................................

**2. கருத்துள்ள வசனங்கள் உருவாகும் வண்ணம் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

(1) நித்திலம் / இந்து / இலங்கை / அழைக்கப்படுகின்றது / என/ சமுத்திரத்தின்
..........................................
(2) அதனைச் / ஒன்றின் / தொடங்காதே / முன் / செய்யத் / இயல்பை / அறிய
..........................................

**3. பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.**

(1) அள்ளிக்குவித்தல் ..........................................

(2) நாக்குப் புரளுதல் ..........................................

**4. சரியான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. கைகளை .................... இட்டுக் கைகழுவுதல் நல்லது.'
 (சவர்காரம், சவுக்காரம், சவர்க்காரம்)
2. ..............................நறுமணம் வீசியது.
 (முள்ளைமலரின், முல்லை மலரின், முழ்லை மளரின்)

5. பொருத்தமான இரட்டைக்கிளவியை வைத்து இடைவெளிகளை நிரப்புக.
1. பெண்கள் ..........................வெனச் சிரித்தார்கள்.
2. மல்லிகைப் பூவின் நறுமணம் ..........................வென்றுவீசியது.

**6. கீழே இலங்கையிலுள்ள மதத்தவர்களும், அவர்களின் புனிதமான நூல்களும், அவர்களால் கொண்டாடப்படும் சமய விழாக்களும் ஒழுங்கின்றித் தரப்படுகின்றன.**

**மதத்தவர்கள் -** இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள்.
**நூல்கள் -** திரிபீடகம், திருக்குர்ஆன், பைபிள், வேதசிவாகமம்.
**விழாக்கள் -** நத்தார், தீபாவளி, வெசாக், ரம்ழான், நவராத்திரி, பொசன், ஈஸ்டர், ஹஜ்.

**மேலே தரப்பட்ட விவரங்களை அவர்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களின் கீழே 'அ' பகுதியில் மதத்தவர்களையும், 'ஆ' பகுதியில் நூல்களையும் 'இ' பகுதியில் விழாக்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக.**

1.

(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
 2. ..........................

2.

(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
 2. ..........................


3.

(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
 2. ..........................


4.

(அ) ..........................
(ஆ) ..........................
(இ) 1. ..........................
 2. ..........................

**7. சரியான விடைகளை கணித்து எழுதுக.**




1. **A** இன் நீளம் யாது? ..........................
 **B** இன் நீளம் யாது? ..........................

2.


இவ்வுருவின் பரப்பளவு யாது?
..........................


UNIT
தாயக வெப்பத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட கணனிகள்
ORIGINAL COMPLETE COMPAQ PRODUCT
FREE
ஒவ்வொரு கணனியுடனும்
Screen Filter, Dust Cover
Mouse Pad & CD Cleaner

இவை ஒரு வருட முழு உத்தரவாதத்துடன் கூடியவை
P4 கணனிகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வேகத்துடன்
அவுஸ்திரேலியாவின் Ipex
இப்போது உங்கள் ...வைக்கு

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII TOWER MODEL கணனிகள் விற்பனைக்குண்டு
Latest PIV கணனிக் (3 வருட முழு உத்தரவாதம்) மற்றும் உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Compaq PIII 10 GB Hard Disk, Mouse, Monitor, 128 MB SDRam, CD Rom, Floppy Drive, Keyboard
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna. T.P: 021-4590720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3.



கடிகார முகம்காட்டும் நேரத்தைச் சொற்களில் எழுதுக.

.....................................................

4.



பந்துகளின் எண்ணிக்கையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

.....................................................

5.




(i) இத்திண்ம உருவின் பெயர்?

.....................................................

(ii) இதன் விளிம்புகள் எத்தனை?

.....................................................

**8. ஒவ்வொரு பாத்திரத்திலும் காட்டப்பட்டுள்ள நீரின் கனவளவைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை அளியுங்கள்**




1. **A** இலும் **B** இலும் உள்ள நீரின் மொத்த கனவளவு .........................
2. **A** இலும் **C** இலும் உள்ள நீரின் மொத்த கனவளவு .........................
3. **A** இலும் **D** இலும் உள்ள நீரின் மொத்த கனவளவு .........................
4. **B** இலும் **C** இலும் உள்ள நீரின் மொத்த கனவளவு .........................
5. **B** இலும் **D** இலும் உள்ள நீரின் மொத்த கனவளவு .........................
6. எவ்விரு பாத்திரங்களில் உள்ள நீரின் மொத்த கனவளவு 9ℓ 775mℓ ஆகும். ..........

**9. பின்வரும் தாவரங்களின் பெயர்களை தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(1) திப்பிலி (2) நன்னாரி (3) வல்லாரை (4)இஞ்சி (5)நொச்சி




(.............) (.............) (.............) (.............) (.............)

**10. சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. இலங்கையில் மின் உற்பத்திக்குப் பிரதானமாக பயன்படும் மூலதனம்.
   (1) சூரியஒளி (2) காற்று. (3) எரிபொருள் (4) நீர்

2) இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
   (1) ஜே.ஆர். ஜெயவர்த்தனா (2) ஆர். பிறேமதாஸா
   (3) வில்லியம் கோபல்லாவ (4) சந்திரிகா குமாரதுங்க

3) இலவசக் கல்வியின் தந்தை எனப்படுபவர்
   (1) ஆனந்த சமரக்கோன் (2) C.W.W கன்னங்கரா
   (3) ஆறுமுகநாவலர் (4) அறிஞர் சித்திலெப்பை

4) நீருடன் கலக்காத திரவம் எது?
   (1) வினாகிரி (2) பால்
   (3) மண்ணெண்ணெய் (4) உப்புநீர்

5) மின்னைக் கடத்துவது எது?
   (1) அலுமினியம் (2) இறப்பர்
   (3) கண்ணாடி (4) கடதாசி

6) ஆணிவேர்த் தாவரம் எது?
   (1) நெல் (2) வேம்பு (3) தென்னை (4) வெங்காயம்

7) நீரில் வேகமாகக் கரைவது எது ?
   (1) உப்பு (2) சக்கரை (3) யூரியா (4) கல்

8) காந்தம் கவராத பொருள்
   (1)குண்டூசி (2)இரும்புத்தூள் (3) இறப்பர்பந்து (4) இரும்பாணி

9) மின்னேரியாக் குளத்தை கட்டுவித்தவன்,
   (1) காசியப்பன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு (4) வசபன்

10) இலங்கையில் உயரமான நீர்வீழ்ச்சி எது?
   (1) துன் இந்த (2) பம்பரகந்த (3) தியலும (4) லக்சபானா

**(11) பின்வரும் சொற்களினை ஒழுங்குபடுத்தி வசனமாக எழுதுக?**

1) is / Raja / name / my .....................................................
2) a / is / that / small / bus .....................................................

**(12) பின்வரும் தமிழ்ச் சொற்களின் ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

(1) காகம் ......................... (2) குரங்கு .........................
(3) கதவு ......................... (4) வைத்தியசாலை .........................

**(13) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.**

(1) Birds ......................... (2) Butterfly.........................
(3) Food ......................... (4) Nest.........................

**(14) சரியான விடையை கணித்து எழுதுக.**

(1) நீர்த்தாங்கியொன்றில் 06: 30 மணித்தியாலத்திற்கு நீர் விநியோகம் ஆரம்பமாகியது. 3 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் நீர் விநியோகம் நிறுத்தப்பட்டது . நீர் விநியோகம் நிறுத்தப்பட்ட நேரம் யாது?

.........................................

(2)பேனை ஒன்றின் விலை ரூபா 8.50 ஆகும். 6 பேனையும் 2 கொப்பிகளும் வாங்கிய ஒருவர் அதற்காக 100 ரூபா செலுத்தினார் எனின் ஒரு கொப்பியின் விலை யாது?

.........................................

3) பெட்டியொன்றில் 6 சவர்க்காரக் கட்டிகள் வீதம் 258 சவர்க்காரக் கட்டிகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை?

.........................................

4) ஒரு பாடசாலைக்கு 216 கதிரைகள் தேவைப்பட்டன. இன்னொரு பாடசாலைக்கு அதன் மூன்று மடங்கிலும் 14 கதிரைகள் கூடுதலாகத் தேவைப்பட்டன எனின் இரு பாடசாலைகளுக்கும் தேவையான கதிரைகள் எத்தனை?

.........................................

5) 75cm நீளமுள்ள துணிக்கீலமொன்றின் நீளம் எத்தனை மில்லி மீற்றர்?

.........................................

15) **'நான் பாடசாலைக்குச் செல்லும்போது, இடையில் பெரு மழையில் அகப்பட்டேன்'** என்னும் சம்பவத்தைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வசனத்திலும் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலைகள் சரியாக அமைதலும் வேண்டும்.

1 .....................................................................
2 .....................................................................
3 .....................................................................
4 .....................................................................
5 .....................................................................
6 .....................................................................

தயாரிப்பு:-
வேலுப்பிள்ளை அலிபாறகனி
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை

விடை நாளைய பத்திரிகையில்

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி
2007 A/L புதிய பிரிவுகள்
மிக விரைவில் ஆரம்பம்
கணக்கியல் - SAM
வர்த்தகம் - பசில்
பொருளியல் - ஸ்ரீ
புள்ளிவிபரவியல் - தவசேகர்
அனுமதிக்கு முந்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org